72

Regd. No. M. 2573.

பாலவித்யா

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

பாலவித்யா ஜர்னலின் 1வது ஆண்டு சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்தது.

ஷை வருஷத்தில் *சபேசன் என்ற ஒரு பெரிய நாவலும், 2 சிறிய நாடகரூபமான நாவல்களும், மற்றும் சில சிறு கதைகளும், வியாஸங்களும் வெளிவரலாயிற்று.

1931௵த்தில் இரண்டு பெரிய நாவல்களும், இதர சிறு கதைகள், வியாஸங்களும் வெளியாகும்படி ஏற்பாடு செய்திருக்கிறது.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை **வேண்டுகோள்** என்னும் தலைப்புப் பாடலாலே காட்டியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர்.

ஆகவே சந்தாதாரர்கள் (V. P.ல் அனுப்பினால் 4 அணா அதிகம் செலவாகிறபடியால்) சந்தா தொகையை மணியார்டர் செய்து 2வது ஆண்டுக்கு சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதுடன் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாக சேரும்படி செய்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்." (கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

* 2வது ஆண்டில் சேரும் சந்தாதாரர்கள் ஷை நாவலுக்கு ஆர்டர் செய்தால் தபாற்செலவு இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 1-8-0

188780
1031

(மா... கை)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

தொகுதி II	1931௵ மார்ச்சு௴ பிரமோதூத௵ பங்குனி௴	பகுதி III

உ

மருந்தின்மை, பசி கோல்லாமை இவை இயற்கை நெறியாகும்.

யாதொரு மருந்தில்லாமல் பொதுவில் வியாதிகள் தானாகவே விலகலாம். ஆனால் பத்தியத்துடனிருக்கவேண்டும். பத்தியமென்பதே மித போஜனமாகும். அளவுடன் சாப்பிடுவதால் இயற்கை திடங்கொள்ளுகிறது. ஒரு ஆகாரம் நன்றாக ஜீரணமாகிய பிறகே மற்றொன்றை உட்கொள்ளவேண்டும். முதலில் உட்கொண்ட ஆகாரம் நன்றாக ஜீரணமாகாதவரையில் மறுபடியுங் கொள்ளும் ஆகாரமானது ஜெரிக்காத பாகத்துடன கலந்து, அதிகநேரம் குடலில் தங்கும்படி நேர்ந்து, கெட்டு குடலையும் கெடுத்துவிடும். அதனால் ஜீரண சக்தியும் குறைவுபடும். குடலும் அதன் திராவகங்களும் பித்தமும் அதனதன் குணத்தை இழக்கின்றன. அவ்விதமின்றி முதலாகாரம் நன்றாக ஜீரணித்துவிட்டால் குடல் சுத்தமாகவும், மற்றொரு ஆகாரத்தை ஏற்றுக்கொள்ள பலமுள்ளதாகவுமிருப்பதால் அதிலுற்பத்தியாகும் ஜீரணகாரி திராவகங்களும் உசிதமான பலத்தைப் பெற்று, மற்

லொரு ஆ[illegible] விழுந்தவுடன் அதை அதிகநேர[illegible]கி கெட்டுப் போகவிடாம[illegible] அந்த வேண்டியளவு ஜீரணித்து ரத்[illegible]க்கி சரியான காலத்தில் அ[illegible]ந்த ஸ்தானங்களுக்கு [illegible]டம்பு[illegible] செய்கின்றது. விருத்தமான ஆகா[illegible] உட்கொள்ள[illegible]து உட்கொண்ட ஆகாரமானது நன்றாக ஜீரணமாகி ரத்தத்துடன் கலக்கும்போது சரீரத்தில் அவைகள் காட்டும் குறிகளுக்கு வீரியமெனச் சொல்வது. ஒவ்வொரு ஆகாரமும் அதாவது வஸ்துக்களிலுள்ள ஒவ்வொரு ருசியும் (அறுசுவையும்) சரீரத்தில் பல குணங்களை உண்டுபண்ணுகிறது. சில வஸ்துக்கள் உஷ்ணத்தை அதிகரிக்கின்றன; சிலவை குளிர்ச்சியை ஜாஸ்தி செய்கின்றன இவ்விதம் வஸ்துக்களுக்கு அதனதன் சுவையை அனுசரித்து சரீரத்தில் சில குணங்களை உண்டுபண்ணும் யோக்யதை இருக்கின்றது. இதுவே வீரியமாகும் இவ்வீரியத்திற்கு விரோதமில்லாத வஸ்துக்களை உபயோகிப்பதே நலம். அதாவது சீத குணங்கொண்ட ஆகாரத்தை உபயோகித்தால் அதற்கு மிருத்துவாகிய வஸ்துக்களையே சேர்த்து உபயோகிப்பது அறிஞர்களின் செயலாகும். (தொடரும்).

S. V. Ram F. M. C. (Lon).

வேடிக்கை துணுக்குகள்.

I

‘அதிகாலையில் எழுந்திருப்பது நலம். சில வேளை லாபமும் உண்டு. நேற்றுக்காலை பாதையில் ஒரு பணப்பை கண்டெடுத்தேன்’ என்றான் ஒரு பாலன்.

அதைக்கேட்ட மற்றொரு சிறுவன் ‘உனக்கு முன் எழுந்தவன் தானே அதை இழந்திருக்கவேண்டும்? அவனுக்கு கிட்டிய பலன் யாது?’ என்றான்.

II

குமாஸ்தா: வாருங்கள், ஒரு கட்சிக்காரன் வந்திருக்கிறான்.

வக்கீல்:—வா போவோம்.

குமாஸ்தா:—அவசரம் வேண்டாம். அவன் தப்ப முடியாது. உள்ளேவைத்து பூட்டிவிட்டு வந்திருக்கிறேன்.

13 நினைப்பவர்கள் மனந்தன்னுள் நினைவே தானாய்
நிற்கின்ற நிமலனே யமலனே செம்
தினைப்புனத்து வள்ளிதனைத் திருந்தச் சேரும்
திருத்தணிகைப் பெருமானே தேவர் கோன்றன்
நினைப்பரிய நற்றவத்துச் சுதன்ச யந்தன்
நினைப்பிரிய முடன்சிறையுள் நினைந்து வேண்ட
முனைப்புதுவே லுடனவன்முன் முறுவல் பூப்ப
முன்னவனே முன்றோன்று முருக வேளே.

14. குரைகடலா மகழிகொண்ட மகேந்தி ரத்திற்
குலமணிகள் குயிற்றியிழை கோயில் தன்னுள்
நிரைமணிக ளொலிகாலு மாத னத்துள்
நீண்டநா ளரசுபுரி சூரன் முன்னர்
உரைபலவு நிகழ்த்தியவ னுரைத்த மாற்ற
முணர்ந்துசில ருயிர்தமையு முயர வேற்றித்
திரைகரையி லுறைமாடச் செந்தூர் மேய
திறல்வீர னுரைகொண்ட செந்தி லானே.

15. திருவுளத்தின் குறிப்பறியாச் சூரன் றன்னைத்
திருத்தியாட் கொண்டிடவுந் தேவர் தம்மின்
பெருவருத்த மருஞ்சிறையும் போக்க வேண்டிப்
பெருங்கருணை கொண்டுதிரைப் பாவை தாண்டிப்
பொருகருத்தி னுறவமைந்த வேம கூடம்
பொருந்தியிருந் தமர்களு மாலு மற்றும்
திருமலர்த்தண் டவிசிருக்கு மயனும் போற்றுந்
திகழுருவப் பெருஞ்சோதி வேற்கை யானே.

16. முதுரைளி லெதிர்வந்த பானு கோபன்
முன்சென்று பொருதுவர வீர வாகு
இதமாக விலக்கருடன் எண்மர் சூழ
இருந்துபெருஞ் சண்டையிடு வேளை தன்னில்
மதமான மோகனத்தின் மாயந் தன்னால்
மயங்கியுணர் வழிந்திடலு மதனை யுன்னிக்
கதமான வொருகணையைக் கடிதி னேவிக்
கலக்கமெலாந் துலக்கிடுசெங் கதிர்வே லானே.

17. சீறிவிழு சூரர்பலர் சுற்ற வந்த
சிறுமதியப் பெருவலியச் சூரன் றானும்
வீறியெழு திறமனைத்தும் விளையாட் டாக
விளங்குசிறு கணைகொண்டு விலக்கஞ் செய்து
தேறியெழு முறைகள்பல திருந்தச் செப்பித்
தினையளவுங் கொள்ளாவத் தீயன் றன்னைப்
பீறியெழு சிறுகணைகள் பெருக விட்டே
பீதிகொளச் செய்திடுநன் னீதி யானே.

18. இப்பாலு மமர்விளைத்த சூரன் சேயின்
இருங்கணையின் பெருமாயத் தினைவ ரோடுந்
தப்பாம லகப்பட்டே தண்ணீ ராழி
தன்னிடையே உணர்வின்றி வீர பாகு
செப்பாம லிருந்திடலுந் தெரிந்து வீரச்
செவ்வேலைச் செலவிடுத்துச் சிந்தை தந்து
அப்பாலு மழைத்தாண்ட வண்ண லெந்தை
யருள்வடிவே யறுமுகனே ஆதி யானே.

19. அஞ்சாத சூரன்மகன் பானு கோபன்
அவனுயிரை விண்ணேற்றி வீர பாகு
எஞ்சாது சூரர்களை வாட்டி யோட்டி
யெதிரின்றித் திரும்பிவந்தங் கிறைஞ்சி நிற்கத்
தஞ்சேயென் றடிபணிந்து தேவ ரேத்தத்
தனிக்கோலத் தவிசுறையுந் தாளா னேவாழ்
மஞ்சாரு மதில்புடைகொள் மாத லங்கள்
மனனிருத்தி வழுத்திடுதற் கருள்செய் வாயே.

20. எங்கான படைகளையு மெளிதிற் கூட்டி
எதிர்த்தவரைக் கதித்தெழுவெங் கோபந் தாறு
மங்காத வறிவினையு மடக்கு மாபோல்
மடக்கிவரு சிங்கமுக வசுரன் றன்னைத்
தங்காம லவன்மார்வந் தொளைத்து மீண்ட
தனியாண்மைக் கொற்றவேற் கந்தா வெந்தன்
றங்காத மனமடக்கித் தணியச் செய்வாய்
தருமத்தின் பெருவடிவே தணிகை யானே.

தன் உயிருள்ளவரையில் பகிரங்கமாய் வெளிவர வழியின்றி கேவலம் கொலைபாதகர்களைப்போல் ஒளிந்துகொண்டிருக்க வேண்டியதையும், அப்படியே அவன் தைர்யத்துடன் வருவானாகில் உடனே கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்படுவானென்பதையும் பிறகு தெரிந்துகொள்ளவே, நான் பட்டபாடு என்னைப் படைத்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். நடுவில் பலதரம் உள்ளதை ஒப்புக்கொண்டு, தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தேன். ஆனால் அப்படிச் செய்யவும் மனம் துணியாமல், நான் தத்தளித்துக்கொண்டிருக்கையில், தெய்வமே என்மீது கிருபைவைத்து, இவ்விதம் செய்தார்போலும்.

இவ்விஷயம் நம்முடைய கார்யஸ்தர் ராமானுஜய்யங்காருக்கும் தெரியுமாகையால், மேலே செய்யவேண்டிய கார்யத்திற்கு அவரையும் கலந்துகொள்ளவும் (இவ் வாக்கியத்தை வாசித்ததும், ராமானுஜய்யங்கார் திடுக்கிட்டவர் போல், வாசிப்பதை கொஞ்சநேரம் நிறுத்திவிட்டு, பிறகு மறுபடியும் வாசிக்கவாரம்பித்தார்.)

கூடிய சீக்கிரம் கங்காதரன், நிரபராதியென்று ரூபிக்கப்பட்டு, திரும்பி வந்துவிடுவானென்று நம்புகிறேன். அம்மா! அவன் வந்ததும், நான் இவ்விதம் அவனை இக் கஷ்டத்திற்குள்ளாக்கியதற்காக, என்னை தயவுசெய்து மன்னிக்குமாறு நான் கெஞ்சிக்கேட்டுக்கொண்டதாக அவனிடம் சொல்லவும். உன் வயிற்றில் பிறந்து இவ்விதம் உன்னை இந்த துக்கசாகரத்தில் ஆழ்த்தியதற்காக, நீயும் தயவுசெய்து என்னை க்ஷமிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் நான் செய்த கார்யத்தின் பலனைக் குருஸ்வாமியின் தாயாருக்கு எவ்வித கஷ்டமும் வராமல் நீ பார்த்துக் கொள்வாயென்று பரிபூர்ணமாய் நம்புகிறேன்.

என் மனைவி மங்களத்தை நீ உன் வயிற்றில் பிறந்த பெண்ணென்றே நினைத்து காப்பாற்றுவாயென்பது எனக்கு நன்றாய்த் தெரியுமாகையால், அவளைப்பற்றி நான் மேலும் எழுதவேண்டியது அவசியமில்லை.

கோபாலன்."

ராமானுஜய்யங்கார், இக் கடிதத்தை வாசித்து முடித்ததும், கங்காதரனுடைய தாயார், சுமார் 10 நிமிஷநேரம், தன் நேத்திரங்களிலிருந்து நீர் தாரைதாரையாய்க் கொட்ட பெருமூச்செறிந்தவண்ணம் இருந்தாள். பிறகு, அவள், தன் கார்யஸ்தரை நோக்கி,

"ஏன் ராமானுஜய்யங்காரே! இது உமக்குத் தெரிந்திருந்துமா நீர் இது வரையில்—" என்று மேலே பேசு முன், ராமானுஜய்யங்கார்,

"அம்மா! இது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. எனக்கு இவ் விஷயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவர் ஏன் இப்படி எனக்கும் தெரியுமென்று எழுதினாரென்பது எனக்குப் புரியவே இல்லை." என்றார். இதைக் கேட்டதும், கங்காதரனுடைய தாயார், வியப்புற்று,

"என்ன? உமக்கு ஒன்றும் தெரியாதா? ஏன் ஐயா! அப்படியானால் அவன் உமக்குத் தெரியுமென்று எழுதக் காரணமென்ன?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"அதான் எனக்குப் புரியவில்லை என்று சொல்லிவிட்டேனே." என்று கூறியவண்ணம், திரும்பி, கோபாலய்யரை நோக்கி, "டாக்டர்வாள்! இக் கடிதத்தை அவர் தன் சுயநினைவுடன் எழுதினாரென்பதைமட்டும் உம்மால் ரூபிக்க முடியுமேயொழிய, அவர் எழுதியதெல்லாம் உண்மையென்று உம்மால் ரூபிக்கமுடியுமோ?" என்று வினவினார். கோபாலய்யர்,

"அது எப்படி முடியும்? முடியாது." என்று விடையளிக்கவே, ராமானுஜய்யங்கார், கங்காதரனுடைய தாயாரை நோக்கி மிகவும் மரியாதையுடன்,

"அம்மா! எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. உங்களுக்கு இஷ்டமிருந்தால் சொல்லுகிறேன்." என்று கூற, அம்மாது, அவரை உற்றுநோக்கியவண்ணம்,

"என்ன சொல்லுமே." என்றாள். உடனே, அய்யங்கார்,

"கோபாலன் தான் இறந்துவிடுவோமென்று தெரிந்துகொண்டதும், இவ்விதம் தானே இதைச் செய்ததாக ஒப்புக்கொண்டால் தற்சமயம் ஓடி ஒளிந்துகொண்டிருக்கும் கங்காதரன் நிரபராதியென்று ரூபிக்கப்பட்டு பகிரங்கமாய் வெளியில்வந்து விவாஹம் செய்துகொண்டு சௌக்கியமாயிருக்கலாமென்று எதிர்பார்த்து இக் கடிதத்தை எழுதியிருக்கலாம்." என்று கூறவே, அம்மாது,

"சரி; அவன் அந்த எண்ணத்துடன் இக்கடிதத்தை எழுதினானென்றால், இது உமக்கும் தெரியுமென்று எழுத வேண்டிய அவசியமென்ன?" என்று வினவினாள். ராமானுஜய்யங்கார், தயக்கமின்றி,

"இருங்கள்; அதற்கும் காரணமிருக்கும்." என்று கூறிக்கொண்டே திரும்பி மறுபடியும் கோபாலய்யரை நோக்கி,

"ஏன் டாக்டர்வாள்! அவர் இக்கடிதம் எப்பொழுது எழுதினார்?" என்று வினவ, கோபாலய்யர்,

"அவன் இறந்தது ஒரு வியாழக்கிழமை அல்லவா? ஆமாம்! அவன் இதை அதற்கு முந்திய செவ்வாய்க்கிழமை எழுதினான்." என்று விடையளிக்கவே, ராமானுஜய்யங்கார்,

"சரிதான்; அம்மா! இதில் சந்தேகமே இல்லை. நான் அதே செவ்வாய்க்கிழமை கிராமத்துக்குப் போனது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். பிறகு வியாழக்கிழமை இரவு 8மணிக்குத்தான் திரும்பிவந்தேன். நான் வரும்பொழுது அவருக்கு பிரக்ஞை தவறிப்போய்விட்டது. அவர் இவ்விதம் தான் கடிதம் எழுதியிருப்பதை என்னிடம் சொல்லி பிறகு ஜனங்கள் கேட்கும்பொழுது இது எனக்கு முன்னமே தெரியுமென்று என்னைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்ளும் எண்ணத்துடன் முதலில் இக்கடிதத்தை எழுதியிருக்கவேண்டும். ஆனால் அது முடியாமற்போய்விட்டது. எனக்கு இப்படித்தான் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது." என்றார்.

இதைக்கேட்டதும் கங்காதரனுடைய தாயார், அவரை மறுபடியும் ஒருதரம் ஏற இறங்க கவனித்துவிட்டு,

"ஏன் ஸ்வாமி! உம்மைத்தான் பிறகு கேட்டுக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் இதை முதலில் எழுதிவிட்டான். ஆனால் குருஸ்வாமியின் வீட்டு வேலைக்காரி நாகுவையும் கேட்டுக்கொள்ளலாமென்று நினைத்தானோ? இக்கடிதத்தில் தான் அன்று இரவு குருஸ்வாமியின் வீட்டிற்குப் போனபொழுது அவ்வீட்டில் நாகு இருந்தாளென்று எழுதியிருக்கிறானே. அதற்கென்ன சொல்லுகிறீர்?" என்று வினவ, ராமானுஜய்யங்கார், என்ன விடையளிப்பதென்று புரியாமல் தயங்கவே, அம்மாது,

"இன்னும் நாகு இது நடந்த மறுதினமே இவ்வூரை விட்டு ஓடிப்போய்விட்டாள். அவ்வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த அவளுடைய தங்கை, அவ்விதம் தாங்கள் எல்லோரும் வெளியூர் போகத் தீர்மானித்திருப்பதாக, கடைசிவரையில் சொல்லவே இல்லை. இதை கவனிக்கும்பொழுது, நாகு பிறருடைய போதனையால் போலீஸார் தன்னை விசாரித்தபொழுது பொய்ச்சாக்ஷி சொல்லியிருக்கிறாளென்றும், அவ்விதம் புளுகும்படி தூண்டியவன், அவள் இவ்வூரிலிருப்பது அபாயத்திற்கிடமென்று பயந்து, போலீஸார் அவளை மறுபடியும் விசாரிக்குமுன், இவ்வூரை விட்டுப்போக ஏற்பாடு செய்துவிட்டானென்றும் தோன்றுகிறது. இன்னும் நாகுவை அவ்விதம் பொய்ச்சாக்ஷி சொல்லும்படி தூண்டியவனுக்கு குருஸ்வாமியை வாஸ்தவத்தில் அடித்தது கோபாலனே என்ற விஷயமும் தெரிந்திருக்கவேண்டும். அவன் அதை வைத்துக்கொண்டு, போலீஸார் கோபாலனை சந்தேகிக்காமலிருக்க, வேண்டிய ஏற்பாடுகளை தானே செய்வதாக கோபாலனிடம் வாக்களித்துவிட்டு, இவ்விதம் நாகுவை சரிப்படுத்தியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நாகு, பிறருடைய போதனையில்லாமல், தானே குருஸ்வாமியை கோபாலன் அடித்ததை பார்த்திருந்து, பிறகு கோபாலனைக் காப்பாற்றும்பொருட்டு இவ்விதம் புளுகியிருக்கலாம். ஆனால் கோபாலனைக் காப்பாற்றும்

பொருட்டு நாகு இவ்வளவுதூரம் சிரமம் எடுத்துக்கொள்வாளென்று எனக்குத் தோன்றவில்லை. அவள் அப்படிச் செய்வதற்குக் காரணம், தான் அப்படிச் செய்யும்பக்ஷத்தில் பிறகு கோபாலனை பயமுறுத்தி சதா பணம் பறித்துக்கொள்ளலாமென்று நம்பியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த இரஹஸ்யத்தை அறிந்த மற்றொருவன், தான் கோபாலனை பயமுறுத்திப் பணம் பறிக்கத் தீர்மானித்து, நாகு தான் சொல்வதுபோல் போலீஸாரிடம் பொய்ச்சாக்ஷி சொல்லும்பக்ஷத்தில் தான் பறிக்கும் பணத்தில் அவளுக்கும் பங்கு கொடுப்பதாக வாக்களித்திருக்கவேண்டும். இருக்கட்டும்; இக்கடிதத்தை நான் உடனே போலீஸாருக்கு அனுப்பவேண்டும்." என்று கூறவே, ராமானுஜ அய்யங்கார், தன்னுள், "அடேயப்பா! இவள் வக்கீலுடைய பெண்டாட்டி என்பது சரியாயிருக்கிறதே." என்று சொல்லிக்கொண்டு, பிறகு தன் வாயைவிட்டு,

"அம்மா! நீங்கள் சொன்னதைக் கேட்ட பிறகு, கங்காதரன் வாஸ்தவத்தில் நிரபராதியென்றே எனக்கும் தோன்றுகிறது. எப்படியாவது நாம் இந்த நாகுவைக் கண்டுபிடித்து, கங்காதரன் வாஸ்தவத்தில் நிரபராதியென்று ரூபிக்கக்கூடுமானால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்." என்று கூறவே, கங்காதரனுடைய தாயார்,

"அதை நீர் சொல்லவும் வேண்டுமோ?" என்று கூறியவண்ணம், அவரை மறுபடியும் ஒருதரம் உற்று நோக்கினாள். பிறகு, "சரிதான்; இது இப்படித்தான் இருக்கவேண்டும். ராமானுஜய்யங்காரே! நம்முடைய வீட்டிலிருந்த அந்நகைகளும், 7500 ரூபாய் பணமும் திருட்டுப்போனது ஞாபகமிருக்கிறதா? அவைகள் போன வழி என்னவென்பது எனக்கு இப்பொழுது நன்றாய்த் தெரியும். ஒன்று நாகுவோ, அல்லது அவளை பொய்ச்சாக்ஷி சொல்லும்படி தூண்டியவனோ, கோபாலனை பயமுறுத்தி, அவைகளை வாங்கிக்கொண்டிருக்கவேண்டும். ஏன்? உமக்கு என்ன தோன்றுகின்றது?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

அம்மா! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. அடாடா! என்ன அநியாயம்?" என்றார். உடனே அம்மாது,

"ஆமாம். அப்படியே ஒருவன் கோபாலனுடைய இரஹஸ்யத்தை அறிந்து, பயமுறுத்தி, அந்நகைகளையும் பணத்தையும் பிடுங்கிக்கொண்டிருந்து, அவன் கண்டுபிடிக்கப்பட்டால் அவனுக்கு எப்பேர்ப்பட்ட தண்டனை கிடைக்கும்? முதலாவது குற்றம் அவன் வாஸ்தவத்தில் குருஸ்வாமியை அடித்தவன் யாரென்பது தனக்குத் தெரிந்தும் அதை போலீஸாரிடம் சொல்லாதது. இரண்டாவது ஒரு பெண்பிள்ளையை பொய்ச்சாக்ஷி சொல்லும்படி தூண்டியது. மூன்றாவது ஒருவனை பயமுறுத்தி அவனிடமிருந்து 25000 ரூபாய் மதிப்புள்ள நகைகளையும் 7500 ரூபாய் பணத்தையும் பிடுங்கிக்கொண்டது. இம்மூன்று குற்றங்களுக்கும் அவன் தண்டிக்கப்படுவானல்லவா?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"அம்மா! அவன் செய்திருக்கும் குற்றங்களை நினைக்கும்பொழுதே என் உடல் நடுங்குகிறது." என்றார். அப்பொழுது அவருடைய சரீரம் வாஸ்தவத்திலும் நடுங்கியது. கங்காதரனுடைய தாயார்,

"நான் சொன்ன குற்றங்களை ஒருவன் வாஸ்தவத்தில் செய்திருந்து, நாம் அவனைக் கண்டுபிடித்துவிட்டால் கங்காதரனை நிரபராதியென்று நாம் எளிதில் ரூபிக்கமுடியுமல்லவா?" என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"தாராளமாய் முடியும்." என்றார். பிறகு அம்மாது, திரும்பி, டாக்டர் கோபாலய்யரை நோக்கி, மரியாதையுடன்,

"ஐயா! நீங்கள் செய்த உதவியை நான் உயிருடன் இருக்கும்வரையில் மறக்கமாட்டேன்." என்று கூறவே, கோபாலய்யர்,

"அடாடா! அப்படி நான் என்ன செய்துவிட்டேன். சரி; நான் போய்விட்டுவருகிறேன்." என்று எழுந்து நின்றார். அம்மாது,

"சரி இக்கடிதத்தை நான் நாளை தினமே போலீஸாருக்கு அனுப்பிவிடுகிறேன். கங்காதரனை நிரபராதியென்று ரூபிக்கும் காரியத்தில் நீங்களும் உங்களால் முடிந்தவரையில் முயற்சி செய்வீர்களென்று நம்புகிறேன்." என்று கூறவே, கோபாலய்யர் தான் தயாரென்று வாக்களித்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார். அவர் சென்றதும் அம்மாது,

"ஹே தெய்வமே! என் குழந்தை (கங்காதரன்) நிரபராதியென்று ரூபிக்கப்பட்டால் என் துக்கம் கொஞ்சம் குறையுமே. ஐயோ! அவனும் உயிருடனிருக்கிறானோ இல்லையோ தெரியவில்லையே. ஹா! என் கண்மணி! நீ எங்கு எவ்விதம் கஷ்டப்படுகிறாயோ? அப்பா! நீ உயிருடனிருந்து நிரபராதியென்று ரூபிக்கமுடியுமானால் நீ ஆசைப்பட்ட அப்பெண் ஸரஸ்வதியை விவாஹம் செய்துகொள்ளலாமே. இப்பொழுது என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லையே. அந்தப் பெண்ணின் விவாஹம் நாளை தினம் ஏற்பாடு செய்திருக்கிறார்களே. என் செல்வமே! நீ உயிருடன் இருக்கிறாயென்பது நிச்சயமாய்த் தெரிந்தால் இதோ அவ்விவாஹத்தை நிறுத்திவிடுவேன். அது நிச்சயமாய்த் தெரியாதபொழுது அதை நான் எப்படி நிறுத்தமுடியும்? அப்பா! நான் என்ன செய்வேன்?" என்று புலம்பிவிட்டு கொஞ்சநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு திடீரென்று நினைத்துக்கொண்டவள்போல், "ஒருக்கால் தனபுரி கிருஷ்ணஸ்வாமி நாயுடுவுக்கு அவன் எங்கு இருக்கிறானென்பது தெரிந்திருக்கலாம். இருக்கட்டும்." என்று ஒருவித தீர்மானத்திற்கு வந்தவள்போல், எதிரில் நின்றுகொண்டிருந்த ராமானுஜய்யங்காரை நோக்கி,

"ராமானுஜய்யங்காரே! நீர் தயவுசெய்து எனக்கு ஓர் காரியம் செய்யவேண்டும். இப்பொழுது மணி $7\frac{1}{2}$ இருக்கும். நீர் $8\frac{1}{4}$ வண்டியில் புறப்பட்டு தனபுரி சென்று நான் சொன்னதாகச் சொல்லி கிருஷ்ணஸ்வாமி நாயுடுவை கையுடன் அழைத்துக்கொண்டு வரவேண்டும்." என்று கூறவே, ராமானுஜய்யங்கார்,

"அதற்கென்ன? அப்படியே செய்கிறேன். ஆனால் முதலில் வீட்டிற்குச் சென்று அவளுக்கு ஒரு துணை ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும்." என்றார். அம்மாது,

"யார்? உம்முடைய சம்சாரத்துக்குத் தானே. வேண்டுமானால் அவள் இங்கு வந்துவிடட்டுமே." என்று கூறவே, ராமானுஜய்யங்கார்,

"வேண்டாம். அவள் தன் அத்தையை வரவழைத்துக் கொள்வாள். சரி; நேரமாய்விட்டது. நான் உத்தரவு வாங்கிக்கொள்ளட்டுமா?" என்று கேட்க, அம்மாது,

"சரி; நீர் அவரை அழைத்துக்கொண்டு விடியற்காலம் 4 மணிக்குள் வந்துவிடவேண்டும்." என்றாள்.

அய்யங்கார் குறித்த நேரத்திற்குள் வந்துவிடுவதாக வாக்களித்துவிட்டுப் போய்விட்டார்.

அவருடைய தலை மறைந்ததும், கங்காதரனுடைய தாயார், தன் வீட்டில் வெகுகாலமாக வேலைசெய்து கொண்டிருந்த முத்து எனப் பெயர்கொண்ட ஒரு வேலைக்காரனை அழைத்து, அவனிடம் ஏதோ தாழ்ந்த குரலில் கூறினாள்.

அத்தியாயம் 11.

வெளியே சென்ற ராமானுஜய்யங்கார், "என்ன ஆச்சர்யம்? போகும்பொழுது இந்தப் பயல் (கோபாலன்) இந்த வேலை செய்துவிட்டுப் போயிருக்கிறானே. அடேயப்பா! இவள் (கோபாலனுடைய தாயார்) படுத்துகிற பாடாவது? என்ன பேச்சுப் பேசுகிறாள்? அவளைப் பார்த்தால் நியாயஸ்தலத்திற்கும் போய்ப் பேசுவாள் போலிருக்கிறதே. ஆமாம்; இவள் முதலில் நாகுவைக் கண்டுபிடித்து, பிறகு அவளைக்கொண்டு அவளைப் பொய்ச்சாக்ஷி சொல்லுமாறு தூண்டியவனைக் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால் நாகுவைக் கண்டுபிடிப்பது எப்படி? அப்படியே

அவளைக் கண்டுபிடித்தபோதிலும், அவள் வேசில் தான் சொன்னது பொய்யென்று ஒப்புக்கொள்வாளோ?" என்று சிந்தித்துக்கொண்டே சற்று நேரத்திற்கெல்லாம் தன் வீட்டிற்கு வந்துசேர்ந்து, உட்பக்கம் தாளிடப்பட்டிருந்த அதின் வாசற் கதவை தடதடவென்று அவசரத்துடன் தட்டினார். ஆனால் 5 நிமிஷ நேரத்திற்குமேல் அவர் தட்டியும் கதவு திறக்கப்படாததால் "ருக்மணி! ருக்மணி!" என்று உரத்த குரலில் கூவியவண்ணம் மேலும் ஆத்திரத்துடன் அதைத் தட்டலானார். கடைசியில், ருக்மணி பின் கட்டிலிருந்து வாசற் பக்கம் ஓடிவரும் சப்தம் கேட்டது. மறு விநாடி கதவு திறக்கப்படவே, ராமானுஜய்யங்கார், கோபத்துடன்,

"ஏண்டி! அரை மணியாய்த் தட்டுகிறேனே. எங்கே தொலைந்து போய்விட்டாய்? சரி; சீக்கிரம் இலையைப் போடு. $8\frac{1}{4}$ மணி வண்டியில் தஞ்சை போகவேண்டும்." என்றார். இதைக் கேட்டதும், ருக்மணி, வியப்புற்றவள் போல் ஆவலுடன்,

"என்ன விசேஷம்? நீங்கள் போய்விட்டால் நான் ஒண்டியாய் எப்படி—" என்று மேலேபேசுமுன், அய்யங்கார்,

"ஒண்டியாயிருப்பானேன்? உன் அத்தையை வந்து படுத்துக்கொள்ளச் சொல்லேன். சரி; போய் இலையைப் போடு." என்றார்.

உடனே ருக்மணி சமையலறையை நோக்கி ஓடினாள். அவள் சென்றதும் ராமானுஜய்யங்கார், மாடிக்குச் சென்று ஒரு பீரோவைத் திறந்து 50 ரூ. பணத்தை எடுத்துக் கொண்டு மறுபடியும் அப்பீரோவை ஜாக்கிரதையாய்ப் பூட்டிவிட்டு திரும்பியதும், அவருடைய பார்வை பக்கத்தில் போடப்பட்டிருந்த ஒரு விலையுயர்ந்த அழகிய கட்டிலின்மீது விழுந்தது. அதன்மேல் ஏற்கனவே போடப்பட்டிருந்த படுக்கை கலைந்திருந்ததுமன்றி, புதிய ரோஜா புஷ்பத்தின் இதழ்கள் ஏராளமாய்க் கிடந்தன.

ராமானுஜய்யங்கார் மறுபடியும் கீழே சென்று தன் கை கால்களை சுத்தம் செய்துகொண்டு சாப்பிட உட்கார்ந்ததும், தன் மனைவியின் தலைப் பின்னலைக் கவனிக்க, அவள் ரோஜா இதழ்களை அடுக்கு அடுக்காய் வைத்து மிகவும் நாகரீகத்துடன் பின்னிக்கொண்டிருப்பதைக் கண்டதும்,

"ஏண்டி! மாடியில் படுக்கை போட்டிருக்கிறதே. இதுவரையில் படுத்துக்கொண்டிருந்தாயா என்ன?" என்று வினவினார். ருக்மணி, ஒருதரம் தன் அழகிய தோள்களைக் குலுக்கிவிட்டு,

"நன்றாயிருக்கே! இதற்குள் என்ன படுக்கை? நான் பின் கட்டிலல்லவோ உட்கார்ந்துகொண்டிருந்தேன்." என்று கூறவே, நம் அய்யங்கார் அவளுடைய நெற்றியை கவனித்துவிட்டு,

"நெற்றி குங்குமத்தை சரியாய் இட்டுக்கொள்ளக் கூடாதா?" என்று வினவினார். ருக்மணி,

"என்னமோ வியர்வையில் கலைந்துவிட்டாற்போலிருக்கிறது. இதென்ன கேள்வி? இலையைப் பார்த்து வயிறு நிறம்ப சாப்பிடுங்கள்." என்றாள்.

ராமானுஜய்யங்கார் "என்ன ஆச்சரியம்? இவளோ படுத்துக்கொள்ளவில்லையென்று சொல்கிறாள். அப்படியானால் இவளுடைய தலைப் பின்னலில் இருக்கும் புஷ்பம் படுக்கையில் கிடக்கக் காரணமென்ன? என்ன அநியாயம்? குளிர் நடுக்கும்பொழுது, குங்குமம் வியர்வையில் அழிந்திருக்குமென்று சாதிக்கிறாளே. சரி; இவளைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும். ஆனால் இப்பொழுது நான் இவளுடைய சந்தேகத்தைக் கிளப்பக்கூடாது." என்று தீர்மானித்தவராய், தன் சாப்பாட்டை சீக்கிரம் முடித்துக்கொண்டு, எழுந்து அவசரத்துடன் கைகளை சுத்தம் செய்துவிட்டு, பரபரப்புடன் உடுத்திக்கொண்டு,

"அடியே! ஆத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். மாடி பீரோவில் ஊரார் வீட்டுப் பணம் ஏதேஷ்டமாயிருக்கிறது. உடனே உன் அத்தையை கூப்பிட்டுக்

கொண்டு வரச்சொல்லு. ஆமாம். ஜாக்கிரதை! ஜாக்கிரதை! மாடியில் விளக்கை வைத்துக்கொண்டு படுத்துக்கொள். வேண்டுமானால் அந்தத் தடியனையும் (சீமாச்சுவையும்) கீழே படுத்துக்கொள்ளச் சொல். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!" என்று கூறிவிட்டு வெளியே சென்றார்.

தன் புருஷன் சென்றதும் ருக்மணி ஓடிச் சென்று, வாசற் கதவைத் தாளிட்டுக்கொண்டு மறுபடியும் உள்ளே ஓடினாள். பிறகு சமயல் அறைக்குள் நுழைந்ததும், அதன் பக்கத்திலிருந்த ஒரு சிறு அறையை நோக்கி ஆவலுடன் சென்று, வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்த அதன் கதவைத் திறக்கவே, அதற்குள்ளிருந்து அவளுடைய அத்தை பிள்ளை சீமாச்சு வெளியே பாய்ந்து ஓடிவந்து அவளை இறுகக் கட்டிக்கொண்டான். அச்சமயம் நம் ராமானுஜய்யங்கார் சீமாச்சுவின் முகத்தைக் கவனித்திருப்பாராகில் தன் மனைவியின் நெற்றியில் இருந்த குங்கமப் பொட்டு எப்படிக் கலைந்ததென்பதை சந்தேகமற தெரிந்துகொண்டிருப்பார்.

அத்தியாயம் 12.

அதே இரவு சுமார் ௮ மணிக்கு, ஸப் இன்ஸ்பெக்டர் நடேசய்யர், தன் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் வெளி வாசற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்கவே, எதிரில் நின்றுகொண்டிருந்த தன் சமயற்காரனை நோக்கி,

"ராமாமிருதம்! போய் யாரென்று—" என்று அவர் மேலே பேசுமுன் ராமாமிருதம் வெளியேபோய்விட்டான். அவன், சற்று நேரத்திற்கெல்லாம் மறுபடியும் அங்கு வந்து வணக்கத்துடன்,

"சந்நியாசித் தெருவிலிருந்து என் தமயன் பரமேசுவரன் வந்திருக்கிறான். அவனுக்கு உடனே உங்களுடன் பேசவேண்டுமாம்." என்று கூறவே, நடேசய்யர், ஆவலுடன்,

"அப்படியா? அவன் எங்கே? டேய்! பரமேசுவரா!" என்று அழைக்கவே, வெளியில் நின்றுகொண்டிருந்த பரமேசுவரன் உள்ளே வந்து அவரை நமஸ்கரித்து நின்றான். அவனைக் கண்டதும், நடேசய்யர்,

"ஏண்டா! என்ன சமாசாரம்?" என்று வினவ, பரமேசுவரன், அன்று மாலை டாக்டர் கோபாலய்யர் கங்காதரனுடைய வீட்டிற்கு வந்ததிலிருந்து ராமானுஜய்யங்கார் தன் வீட்டிற்குப் போனதுவரையில் நடந்த எல்லாவற்றையும் விபரமாய்க் கூறி முடித்தான். அதுவுமன்றி ராமானுஜய்யங்காருடைய தலை மறைந்ததும் கங்காதரனுடைய தாயார் தன் வேலைக்காரன் முத்துவிடம் தாழ்ந்த குரலில் கூறியபோது அவன் மறைவிலிருந்து உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தானாகையால் அதையும் சொல்லவே, நடேசய்யர்,

"பலேபா! அந்தம்மாள் மகா சாமார்த்தியசாலி போலிருக்கிறதே. பேஷ்! ஆனால் நமக்கு அந்தக் கவலை வேண்டாமென்று சொல்கிறாய்?" என்று வினவினார். பரமேசுவரன்,

"வேண்டவே வேண்டாம். முத்து லேசான பேர்வழியல்ல. அவனை ஒருவராலும் ஏமாற்ற முடியாது." என்று விடைவிளிக்கவே, நடேசய்யர் சுமார் கால் மணி நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு மறுபடியும் பரமேசுவரனை நோக்கி,

"இந்த முத்து நீ சொல்வதுபோல் அவ்வளவு புத்திசாலியாயிருந்தால் நாளைப் பொழுதுவிடியுமுன் நாகு இருக்கும் இடம் நமக்குத் தெரிந்துவிடும்." என்றார்.

சற்று நேரத்திற்கெல்லாம், பரமேசுவரன் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விடவே, நடேசய்யர் எழுந்து தன் கரங்களை சுத்தம் செய்துகொண்டு, தன் அறைக்குச் சென்று, சிந்தனையுடன் மேலும் கீழுமாக உலாவவாரம்பித்தார். ஆனால் மறு நிமிஷம் ஏதோ நினைத்துக்கொண்ட

வர்போல் மறுபடியும் சமயலறைக்குச் சென்று, ராமாமிருதத்தை நோக்கி,

"அடே! எனக்கு ஒரு சந்தேகம். சரி; அதிருக்கட்டும். நீ உடனே சென்று தங்கவேலுவை அழைத்துக் கொண்டு வா." என்று கட்டளையிட்டார்.

* * * * *

கங்காதரன் வீட்டு வேலைக்காரன் முத்து வாஸ்தவத்தில் புத்திசாலியாயிருந்தால், மறுநாள் பொழுதுவிடியுமுன் நாகு இருந்த இடம் தனக்குத் தெரிந்துவிடுமென்று ஸப் இன்ஸ்பெக்டர் நடேசய்யர் எதிர்பார்த்தது தவறல்ல. ஏனெனில், அந்த இரவு சுமார் $2\frac{1}{2}$ மணிக்கு, அவருடைய வீட்டின் வாசற் கதவு மறுபடியும் தட்டப்படவே, அவர் வியப்புற்று எழுந்து சென்று அதைத் திறந்தபொழுது, வெளியில் நின்றுகொண்டிருந்த பரமேசுவரனும் முத்துவும், ஒரே வாக்காய்,

"நாகு கருத்தட்டாங்குடியில் இருக்கிறாள்." என்று கூறினார்கள்.

* * * *

அதே இரவு சுமார் 4 மணிக்கு, ஒரு மோட்டார் வண்டி வேகமாய் வந்து கங்காதரனுடைய வீட்டிற்கெதிரில் நிற்கவே, அதிலிருந்து தனபுரி கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் காரியஸ்தர் ராமானுஜய்யங்காரும் கீழே இறங்கினார்கள். ராமானுஜய்யங்கார் அவ்வீட்டின் கதவைத் தட்டுமுன் அது திறக்கப்படவே, அவர் நாயுடுவை உள்ளே அழைத்துச் சென்று, முதல் ஹாலில் உட்கார்ந்துகொள்ளுமாறு உபசரித்துவிட்டு, பின்பக்கம் சென்றார். கடைசியில் அவர் கங்காதரனுடைய தாயார் வழக்கமாய்ப் படுத்துக்கொள்ளும் அறைக்குள் நுழைந்ததும் திடுக்கிட்டவராய் வெளி வந்துவிட்டார். மறு நிமிஷம், கங்காதரனுடைய தாயார் வெளியே வந்ததும், தடுமாற்றத்துடன் கெஞ்சிய குரலில், அவர்,

"அம்மா! நான் அவ்விதம் உள்ளே வந்ததற்காக் தயவுசெய்து மன்னித்துவிடவேண்டும். உங்களைத் தவிர

வேறு பெண் உள்ளே படுத்துக்கொண்டிருப்பாளென்று நான் எதிர்பார்க்கவில்லை.'' என்று கூறியவண்ணம், அந்தம்மாளுடைய படுக்கைக்குப் பக்கத்தில் போடப் பட்டிருந்த மற்றொரு படுக்கையை நன்றாய்க் கவனித்தார். ஆனால் தலைப் பின்னலும் பட்டுப்புடவை ஒன்றின் ஒரு பாகமும் தான் அவருடைய கண்களுக்குத் தென்பட்டன வேயொழிய, படுத்துக்கொண்டிருந்த பேர்வழியின் முகத்தை அவர் பார்க்கமுடியவில்லை. அவர் அவ்விதம் அப்படுக்கையைக் கூர்ந்து கவனிப்பதைக் கண்ட கங்காதரனுடைய தாயார்,

"அவள் என் அம்மங்காளுடைய பெண். நீர் ராத்திரி போனபிறகு வந்தாள். சரி; கிருஷ்ணஸ்வாமி நாயுடு வந்திருக்கிறாரோ?'' என்று வினவ, ராமானுஜய்யங்கார்,

"வந்திருக்கிறார்.'' என்று விடையளித்தார். உடனே இருவரும் நாயுடு உட்கார்ந்துகொண்டிருந்த இடத்திற்குச் சென்றனர். நாயுடு, அந்தம்மாளைக் கண்டதும், மரியாதையுடன் எழுந்து நமஸ்கரித்தார். அம்மாது, கம்பீரமும் பிரியமும் கலந்த குரலில் அவரை உபசரித்துவிட்டு, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் கார்யஸ்தரை நோக்கி,

"ராமானுஜய்யங்காரே! நான் உமக்கு ஏற்கனவே ரொம்ப சிரமம் கொடுத்துவிட்டேன். வேண்டுமானால் நீர் வீட்டிற்குப் போய் கொஞ்சம் சிரமபரிகாரம் செய்துகொள்ளும்.'' என்று கூறவே, ராமானுஜய்யங்கார், தன்னுள் "சரி; இவளுக்கு நான் இருப்பதில் இஷ்டமில்லை போலிருக்கிறது.'' என்று சொல்லிக்கொண்டு, தன் வாயைவிட்டு,

"சரி; நான் உத்தரவு வாங்கிக்கொள்கிறேன்.'' என்று கூறிவிட்டு துரிதமாய் வெளியே சென்றார்.

ராமானுஜய்யங்கார், பத்து நிமிஷ நேரத்திற்கெல்லாம் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும், ஆவலுடன் அதன் வாசற் கதவைத் தட்டினார். ஆனால் சுமார் 10 நிமிஷ நேரம் அவர் 'தடார்! தடார்!' என்று அதைத் தட்டியும், அது

திறக்கப்படாததால், "இதென்ன அநியாயம்? நான் எப்பொழுது வந்தபோதிலும் இவள் உடனே கதவைத் திறக்கமாட்டேன் என்கிறாளே. அயோக்கிய நாய். திருட்டு—'' என்று வாயைவிட்டுத் திட்டவாரம்பித்தார். நிற்க, எதிர் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்த நால்வர்களில் ஒருவர், "இதென்ன கஷ்டம். நல்ல தூக்கத்தை இப்படி கெடுக்கிறானே.'' என்று முணுமுணுத்த வண்ணம், எழுந்து தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு, எதிர் வீட்டில் ராமானுஜய்யங்கார் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், கோபத்துடன்,

"யார் ஐயா அது? ஏன் இப்படி எல்லோருடைய தூக்கத்தையும் கலைக்கிறீர்? அவ்வீட்டில் ஒருவரும் இல்லை.'' என்று கூறவே, ராமானுஜய்யங்கார், வியப்புற்று கதவை நன்றாய்க் கவனித்ததும் அது வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு "சரிதான். அவள் தன் அத்தை வீட்டிற்குப் போய்விட்டாள்போலிருக்கிறது.'' என்று சிந்தித்தவராய், எதிர் வீட்டில் தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டிருந்தவரை நோக்கி,

"யாரது? நாணு தீக்ஷதரா? வீட்டில் ஒருவரும் இல்லையென்பது எனக்குத் தெரியாது. ஆகையால் கவனிக்காமலிடித்துவிட்டேன். தயவுசெய்து மன்னித்துவிடும்.'' என்றார். உடனே நாணு தீக்ஷதர், அய்யங்காருடைய குரலில் இருந்து அவர் யாரென்று தெரிந்துகொண்டு,

"ஓஹோ! அப்படியா? ஏன் ஸ்வாமி! ஆனால் உம்முடைய ஸம்ஸாரம் சிதம்பரம் போகிறாளென்பது உமக்குத் தெரியாதோ?'' என்று பரிஹாஸக் குரலில் வினவவே, ராமானுஜய்யங்கார், திடுக்கிட்டவராய் பதறிய மனதுடன்,

"என்ன? சிதம்பரமா? எனக்குத் தெரியாதே. ஆமாம்; அவள் சிதம்பரம் போகிறாளென்பது உமக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினார். நாணு தீக்ஷதர்,

"ராத்திரி 9 மணிக்கு உம்முடைய வீட்டு வாசலில் ஒரு வண்டி நின்றுகொண்டிருந்ததால், யார் எங்கே போகிறார்களென்று நான் கவனித்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் உம்முடைய ஸம்ஸாரம் வெளியேவந்து பக்கத்து வீட்டிற்குச் சென்றாள். பிறகு அவளுடைய அத்தை பிள்ளை சீமாச்சு ஒரு பெட்டியையும் படுக்கையையும் கொண்டுவந்து வண்டியில் வைத்தான். அவனை நான் கேட்டபொழுது உம்முடைய ஸம்ஸாரம் சிதம்பரம் போகிறாளென்றும் நீர் ஏற்கனவே ஸ்டேஷனுக்குப் போயிருப்பதாகவும் கூறினான். நீரோ உமக்கு இவ்விஷயம் தெரியாதென்று சொல்லுகிறீர். சரி; உம்முடைய பக்கத்து வீட்டிலிருக்கும் பொன்னுப்பாட்டியை விசாரியும்." என்று கூறிவிட்டு, இதற்குள் எழுந்து தன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த மற்றொருவரை நோக்கி, "டேய் சாம்பா! நாம் நினைத்தபடியே அந்தக் குட்டி அந்தப் பயலை இழுத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டாள்போலிருக்கிறது." என்று தாழ்ந்த குரலில் கூறினார். ஆனால் அவர் கூறியது நம் ராமானுஜய்யங்காருடைய செவிகளிலும் பட்டுவிட்டதால் அவர், அடக்க இயலாத கோபத்துடன்,

"ஓய்! உமக்கு வேறு வேலை இல்லையோ?" என்று சீறவே, நாணு தீக்ஷதர்,

"வாஸ்தவம்; எனக்கு வேறு வேலை இல்லை. உம்மைப்போல் எனக்கு ஒரு பெரிய வீட்டில் கார்யஸ்தர் உத்தியோகம் கிடைத்தால் நான் மிகவும் சந்தோஷப்படுவேன்." என்றார். இதைக் கேட்டதும், ராமானுஜய்யங்கார் அதிகரிக்கும் சினத்துடன்,

"ஓய்! வீணாய் என் கோபத்தைக் கிளப்பாதேயும். ஏன்காணும்! என் உத்தியோகத்தில் நான் கொள்ளையடிப்பதாய் உம்முடைய எண்ணமோ?" என்று கோஷ்டமிட்டார். தீக்ஷதர்,

"அடடா! நான் அப்படிச் சொல்லவில்லையே. ஆனால் 25 ரூபாய் சம்பளத்தில் நீர் எப்படி 5000 ரூபாய் வீடு

வாங்கினீரென்றும் உம்முடைய ஸம்ஸாரத்துக்கு 2500 ரூபாய்க்கு நகைகள் செய்தீரென்றும் எனக்குப் புரியவில்லை. எனக்கு மாதம் 50 ரூ. வந்தபோதிலும் என்னால் —" என்று மேலே பேசுமுன், அய்யங்கார்,

"உம்மால் முடியாவிட்டால் அதற்கு நானா ஜவாப்தாரி? 50 ரூ. வந்தால் நீர் 47 ரூபாய்க்கு பாலக்கரையில் குடித்துவிடுகிறீர்." என்றார்.

இதைக் கேட்டதும் நாணு தீக்ஷதர் திடுக்கிட்டார். தன் இரஹஸ்யம் ராமானுஜய்யங்காருக்குத் தெரியுமென்று அறிந்ததும், தான் மேலும் பேசுவது அவமானத்திற்கிடமென்று பயந்து,

"சரி; போய் பொன்னுப்பாட்டியை விசாரியும்." என்று சொல்லிக்கொண்டிருக்கையில், பக்கத்து வீட்டிலிருந்து சமார் 60 வயதுள்ள ஒரு கிழவி, வெளியே வந்து,

"யாரது? ராமானுஜய்யங்காரா? இந்தாரும். உம்முடைய பெண்டாட்டி என்னிடம் சாவி கொடுத்திருக்கிறாள்." என்று கூறவே, ராமானுஜய்யங்கார், சாவியை வாங்கிக்கொண்டு, அக் கிழவியை நோக்கி தாழ்ந்த குரலில்,

"அவள் உங்களிடம் என்ன சொன்னாள்?" என்று வினவினார். அக்கிழவி,

"அவள் திடீரென்று சிதம்பரம் போகவேண்டியிருப்பதாகவும், நீங்கள் வந்தால் சாவியைக் கொடுக்குமாறும் சொன்னாள். உமக்கு விபரமாய் கடிதம் எழுதி மாடியில் வைத்திருக்கிறாளாம்." என்று விடையளிக்கவே, ராமானுஜய்யங்கார் ஓடிச்சென்று தன் வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். அவ்வீட்டின் முன்கட்டில் விளக்கொன்று இன்னும் எரிந்துகொண்டிருந்தது. அதை கையில் எடுத்துக்கொண்டு, நம் அய்யங்கார் மாடிக்கு ஓடினார். தன் அவசரத்தில் வாசற் கதவைத் தாளிட மறந்துவிட்டார். அவர் மாடிக்குச் சென்று பார்த்தபொழுது அங்கு ஒரு மேஜையின்மீது கடிதம் ஒன்று இருக்கவே, அதை ஆவலுடன் எடுத்து கீழ்க்கண்டவாறு வாசித்தார்:—

"என் 12வது வயதில் நீர் என்னை விவாஹம் செய்துகொண்டபொழுது, உலகில் பெண்களுக்கு மிகவும் அவசியமானது என்னவென்பது எனக்குத் தெரியாது. ஆனால் சென்ற இரண்டு வருஷ காலமாக பெண்களுக்கு, தங்களுடைய புருஷர்கள் எதேஷ்டமாய் நகைகளையும் விலையுயர்ந்த புடவைகளையும் வாங்கிக்கொடுத்தபோதிலும், அவர்கள் அப்புருஷர்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய மற்றொரு சுகமும் உண்டென்பதையும், ஆனால் அதை நான் உம்மிடமிருந்து அடைய வழியில்லையென்பதையும் தெரிந்துகொண்டேன். ஆகையால் நான் என் ஆசைக்கிசைந்த சிமாச்சுவுடன் ஓடிப்போய்விட நிச்சயித்தேன். வாஸ்தவம்; நான் இவ்விதம் செய்வது மகா பாபமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அப்பாபம் உம்மைத்தான் சேரும். ஏனெனில் உம்முடைய 50வது வயதில் நீர் என்னை விவாஹம் செய்துகொண்டபொழுது நீர் வாஸ்தவத்தில் புருஷனல்லவென்பது உமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். அது தெரிந்திருந்தும், நீர் என்னை ஏமாற்றி விவாஹம் செய்துகொண்டதால், தற்சமயம் நான் செய்யும் கார்யத்தின் பலனாய் உமக்கு வரக்கூடிய அவமானத்தையும் நஷ்டத்தையும் நீர் அனுபவிக்கவேண்டியது உம்முடைய கடமை. ருக்மணி."

இக்கடிதத்தை வாசித்ததும் ராமானுஜய்யங்கார், கொஞ்ச நேரம் பிரமித்து, ஸ்தம்பம்போல் நின்றார். பிறகு, 'அடி சண்டாளி!' என்று வீறிட்டு அலறியவண்ணம், கால்கள் சோர்வுற்று, நிற்கவும் சக்தியற்று, நடுங்கும் தன் கரங்களால் மண்டையில் அறைந்துகொண்டு அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டார். உடனே வாயில் வந்தபடியெல்லாம் புலம்பலானார். இவ்விதம் கிட்டத்தட்ட கால் மணி நேரம் கழிந்தது. அதன் முடிவில், திடீரென்று எழுந்து ஓடி, அவ்வறையிலிருந்த ஒரு பீரோவைக் கவனித்தார். அது திறந்திருந்தது. மறுவினாடி மறுபடியும் ஒரு தரம் 'அடி சண்டாளி!' என்று அலறினார். அதற்குக் காரணம், அதில் அவர் வைத்திருந்த ஒரு சிறு பெட்டி காணப்படவில்லை. இதை அறிந்ததும், அவர் மறுபடியும் சுமார் 5 நிமிஷ நேரம் பிரமித்து நின்றார். பிறகு வேரற்ற மரம்போல் மடேரென்று தரையில் வீழ்ந்து மூர்ச்சித்தார்.

அத்தியாயம் 13.

ராமானுஜய்யங்கார் மறுபடியும் தன் சுய நினைவடைந்து, பெருமூச்செறிந்தவண்ணம் மிகவும் சிரமத்துடன் எழுந்து நின்றபொழுது, கீழே தன் வீட்டு வாசலில் வண்டி ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்கவே, மெல்ல நடந்து அவ்வறையிலிருந்த ஒரு ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்தார். மறுவினாடி, அவ்வறையைவிட்டு வெளியே ஓடினார். ஏனெனில் அவர் அவ்விதம் பார்த்தபொழுது, வீதியில் நின்றுகொண்டிருந்த ஒரு வண்டியிலிருந்து அவருடைய மனைவி ருக்மணி கீழே இறங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் ராமானுஜய்யங்கார், மாடியிலிருந்து கீழே இறங்கி, தன் வீட்டின் முன்கட்டிற்கு வந்தபொழுது, அங்கு ஸப் இன்ஸ்பெக்டர் நடேசய்யர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் அவருடைய முகம் வெளுத்தது. ஆனால் சீக்கிரம் தன் கலவரத்தையும் குழப்பத்தையும் வியக்கத்தக்கவிதம் மறைத்துக்கொண்டு,

"நீங்கள் இங்கு வரக்காரணமென்ன?—" என்று மேலே பேசுமுன், வண்டியிலிருந்து இறங்கிய ருக்மணி அங்கு வந்துசேர்ந்தாள். அவளுடைய முகமும் பயத்தினால் வெளுத்து விகாரமடைந்திருந்தது. அவளைப் பார்த்ததும், ராமானுஜய்யங்கார் தன் கோபத்தில் எல்லாவற்றையும் மறந்து புலிபோல் அவள்மீது பாய்ந்து அவளுடைய தலைப் பின்னலை தன் இடது கரத்தால் பற்றிக்கொண்டு, தன் வலது கரத்தால் அவளுடைய கன்னங்களில் பளீர் பளீரென்று அறைந்தார். அவருடைய கோபவெறியைக்கண்ட நடேசய்யர், ஒருக்கால் அவர் அவளைக் கொலையும் செய்துவிடுவாரென்று பயந்தவர்போல் ஓடிச்சென்று, "ராமா

னுஜய்யங்காரைப் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து ஒரு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு,

“ ஸ்வாமி ! நீர் அவளை அடிப்பதில் என்ன லாபம்?” என்று வினவியவண்ணம் திரும்பி, அலங்கோல நிலைமையில் நின்றுகொண்டிருந்த ருக்மணியை நோக்கி, “அம்மா ! நீ உள்ளே போ.” என்று கூறவே, அப்பெண் பின்பக்கம் ஓடி ஒளிந்துகொண்டாள்.

இதற்குள் அவ்வீட்டு வாசலில் ஜனங்கள் ஏராளமாய்க் கூடிவிட்டனர். அதில் நம் நாணு தீக்ஷிதரும் அவருடைய நண்பர் சாம்பனும் தலைகால் தெரியாமல் குதித்துக்கொண்டிருந்தனர். இன்னும் சிலர் அவ்வீட்டிற்குள் நுழைய முயற்சிக்கவே, அதைக் கண்ட நடேசய்யர் தன் கரங்களைக் கூப்பி, புன்முறுவல் செய்தவண்ணம், அவர்களை வீண் வம்பு செய்யாமல் போய்விடுமாறு வேண்டிக்கொள்ளவே, அவர்கள் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி போய்விட்டனர். அவர்கள் சென்றதும், நடேசய்யர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தங்கவேலுவை நோக்கி,

“ எண்டா ! வண்டியில் இருந்த சாமான்கள் எங்கே?” என்று வினவினார். தங்கவேலு,

“ இதோ கொண்டுவருகிறேன்.” என்று கூறிவிட்டு வெளியே சென்றாள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய பெட்டியையும் படுக்கையையும் கொண்டுவந்து வைத்துவிட்டு மரியாதையுடன்,

“ அந்த அம்மாளுடன் இருந்த அய்யர்—” என்று மேலே பேசத் தயங்கவே, நடேசய்யர்,

“ ஓஹோ ! அவரையா ? சரி ; அவரையும் உள்ளே அழைத்துக்கொண்டு வா.” என்று உத்தரவிட்டார். உடனே தங்கவேலு, மறுபடியும் வெளியே சென்று, ருக்மணியின் அத்தை பிள்ளை சீமாச்சுவை அழைத்துக்கொண்டுவரவே, நடேசய்யர் அவனை ஒரு மூலையில் உட்கார்ந்துகொள்ளச்சொன்னார். நிற்க, ராமானுஜய்யங்கார், சீமாச்சுவைக்

கண்டதும் மறுபடியும் வீராவேசத்துடன் தன் பற்களை நெறநெறவென்று கடித்தவண்ணம்,

“ எண்டா காலாடிப்பயலே ! அயோக்கிய ராஸ்கல்!” என்று திட்டிக்கொண்டே தன் இடத்தைவிட்டு எழுந்திருக்கவே, நடேசய்யர், மறுபடியும் அவரைப் பிடித்துக்கொண்டு,

“ ஸ்வாமி! இன்னும் என்ன கோபம்? காணாமற்போன பெண்டாட்டிதான் திரும்பிவந்துவிட்டாளே.” என்று புன்சிரிப்புடன் கூறவே, ராமானுஜய்யங்கார், ஆத்திரத்துடன்,

“ நடேசய்யர்வாள் ! தயவுசெய்து இவ்விதம் பேசாதீர்கள். இந்த முண்டையை இனிமேல் நான் கண்ணைத் திறந்து பார்ப்பேன் என்றா நினைக்கிறீர்கள் ?” என்றார். நடேசய்யர்,

“ நீர் பார்க்கமாட்டீர் என்ற கவலை அந்த அம்மாளுக்குக் கிடையவே கிடையாது. சரி ; வந்த காரியத்தைப் பார்ப்போம்.” என்று கூறவே, ராமானுஜய்யங்கார்,

“ ஆமாம் ! நீங்கள் இவளை எப்படிப் பிடித்தீர்கள் ? இவள் என்னை இப்படி மோசம் செய்துவிட்டு ஓடுகிறாளென்பது உங்களுக்கு எப்படித் தெரியும் ?” என்று வினவினார். நடேசய்யர்,

“ உம்மால்தான் நான் அவளைப் பிடித்தேன்.” என்று கூறவே, ராமானுஜய்யங்கார், திடுக்கிட்டவராய் தடுமாற்றத்துடன்,

“ நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே.” என்றார். நடேசய்யர்,

“ ஆனால் உம்முடைய பெண்டாட்டியை மறுபடியும் உம்மிடம் சேர்ப்பிக்கும்பொருட்டுதான் நான் இப்பொழுது வந்திருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீரோ ?” என்று கேட்கவே, அய்யங்கார்,

“ ஆமாம். அதைத் தவிர உங்களுக்கு என்னிடம் வேறு என்ன—” என்று மேலே பேசுமுன், நடேசய்யர்,

"அய்யங்கார்ஸ்வாமிகளே! நீர் இவ்விதம் பாசாங்கு செய்வதில் எள்ளளவும் பிரயோஜனமில்லை. நீர் செய்திருக்கும் காரியம் எல்லாம் எனக்குத் தெரியும். ஆகையால் வீண் வம்பு செய்யாமல் எல்லாவற்றையும் உடனே ஒப்புக்கொண்டுவிடும்." என்றார். அய்யங்கார்,

"நடேசய்யர்வாள்! இதென்ன நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள்? நான் ஒ—ன்—று—ம் செ—ய்—ய—வி—ல்—லை—யே." என்று மெதுவாய்ப் பேச, நடேசய்யர்,

"சரி; நீர் சொல்லாவிட்டால் நான் சொல்லுகிறேன் கேளும். இதே தெருவில் சுமார் 6 மாதங்களுக்குமுன் குருஸ்வாமி என்ற ஒரு வாலிபன் ஒருவனால் அடிக்கப்பட்டு இறந்தான் அல்லவா? அவன் இறந்த தினம் மாலை நீர் உம்முடைய வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு தாம்பூலம் போட்டுக்கொண்டிருக்கையில் இந்த குருஸ்வாமி வீட்டில் அச்சமயம் வேலைசெய்துகொண்டிருந்த நாகு என்ற ஒரு பெண்பிள்ளை உம்மிடம் வந்தாள். அவள் அடிக்கடி உம்மைக் கண்டு பேசுவதுண்டாம். அவளுக்கும் உமக்கும் எவ்வித சிநேகம் உண்டென்பது ஈசுவரனுக்குத்தான் தெரியும். அவள் வந்து உம்மிடம் அன்று மத்தியானம் குருஸ்வாமிக்கும் தற்சமயம் போலீஸாரை ஏமாற்றிவிட்டு ஓடி ஒளிந்துகொண்டிருக்கும் கங்காதரனுக்கும் நடந்த சண்டையைப்பற்றியும், பிறகு அவள் அவ் வீட்டைவிட்டு வரும்பொழுது இந்த குருஸ்வாமியுடன் கங்காதரனுடைய தமயன் கோபாலன் பேசிக்கொண்டிருந்தானென்றும் கூறினாள். குருஸ்வாமியும் கோபாலனும் அதுவரையில் ஒருவருடன் மற்றொருவர் பேசியது கிடையாதாகையாலும், இன்னும் கோபாலனுக்கும் குருஸ்வாமியிடம் அளவற்ற வெறுப்புண்டென்பது உமக்கு நன்றாய்த் தெரியுமாகையாலும், குருஸ்வாமியுடன் கோபாலன் பேசிக்கொண்டிருக்கிறானென்ற விஷயத்தை அறிந்ததும், சற்றுநேரத்திற்கெல்லாம் நாகு போனதும், நீர் குருஸ்வாமியின் வீட்டிற்குப் போனீர். அன்று நல்ல மழையும் அதன் பலனாய் நல்ல இருளுமிருந்ததால் நீர் அவ் வீட்டிற்குப் போனதையாவது கோபாலன்

அவ்வீட்டிற்குப் போனதையாவது இத்தெருவில் ஒருவரும் கவனிக்க நியாயமில்லாமற்போய்விட்டது. நீர் அவ் வீட்டிற்குள் மெல்ல சப்தமின்றி நுழைந்து ரேழியில் ஒரு மறைவில் நின்றுகொண்டு, கோபாலன் குருஸ்வாமியை அடித்ததையும், அவன் உடனே கீழே விழுந்ததையும் பார்த்துக்கொண்டிருந்தீர். ஆகவே சற்றுநேரத்திற்கெல்லாம் குருஸ்வாமியை அடித்துக் கொன்றது கங்காதரன் என்று வெளியாகவே, நீர் கோபாலனிடம் சென்று அவனை பயமுறுத்தவே, அவ்வாலிபன் தன்னைக் காப்பாற்றுமாறு உம்மை வேண்டிக்கொண்டான். அவனைக் காப்பாற்றுவது மிகவும் லாபகரமான காரியமென்பது உமக்கு நன்றாய்த் தெரியுமாகையால், நீர் அதற்குவேண்டிய ஏற்பாடுகளை செய்வதாக அவனுக்கு வாக்களித்தீர். குருஸ்வாமியின் வீட்டு வேலைக்காரி நாகுக்கும் கோபாலன் அவ்வீட்டிற்கு வந்தது தெரியுமாகையால் முதலில் அவளைச் சரிப்படுத்த நிச்சயித்தீர்.

இன்னும் கங்காதரன் தான் குற்றவாளி என்று ரூபிக்க நீர் அவ்வளவு தூரம் சிரமம் எடுத்துக்கொண்டதற்குக் காரணம், கங்காதரனுக்கு நீர் அவ் வீட்டின் சொத்திலிருந்து கொள்ளையடிக்கிறீரென்பது நன்றாயத் தெரியுமாகையால், அவன் தொலையும்பக்ஷத்தில் நீர் இஷ்டப்படி செய்யலாமென்று நம்பினீர். நாகு அன்று உம்முடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, தான் அன்றிரவு மேலக்கசேரியில் நடக்கும் ஒரு விவாஹத்திற்கு போகப்போவதாக சொல்லியிருந்தாளாகையால், நீர் உடனே சென்று அவளை சரிப்படுத்திவிட்டீர். இன்னும் நாகு இவ்வூரிலிருந்தால் ஒருக்கால் வாஸ்தவம் வெளிவந்துவிடுமென்று பயந்து, அவளை மறுதினமே கருத்தட்டாங்குடிக்கு அனுப்பிவிட்டீர். அவளை அனுப்புமுன் அவள் இவ்விதம் போவாளாகில் அவளுக்கு மாதா மாதம் 50 ரூ. பணம் கொடுப்பதாக வாக்களித்தீர். அவளை அனுப்பிவிட்டு, அதேதினம் கோபாலனை பயமுறுத்தி அவன் வீட்டிலிருந்த 25000 ரூ. மதிப்புள்ள சில நகைகளையும் ரொக்கமாக 7500 ரூ. பணத்தையும் எடுத்துக்கொண்டீர். அந்தப் பணத்தைக்கொண்டுதான் நீர் இவ்வீட்டை

வாங்கினீர். அந்நகைகள் இதோ உம்முடைய மனைவியின் பெட்டியில் இருக்கின்றன.

நேற்றுமாலை டாக்டர் கோபாலய்யர், சாகுமுன் கோபாலன் எழுதிய அக்கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்ததும் நீர் அதைப்பற்றி உமக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டால் கங்காதரனை நிரபராதியென்று ரூபிப்பது அஸாத்தியமென்று நம்பி அவ்விதம் அநியாயமாய்ப் புளுகினீர். கோபாலன் இறந்ததுமே நீர் அதுவரையில் கணக்கில்லாமல் கொள்ளையடித்ததுபோல் மேலும் திருடுவது சாத்தியமில்லாமற் போய்விட்டது. ஏனெனில் கோபாலனுடைய தாயாருக்கும் ஆதியிலிருந்தே நீர் அவ்விதம் அவர்களை மோசம் செய்கிறீரென்பது நன்றாய்த் தெரியும். ஆனாலும் அந்த அம்மாள் தன் பிள்ளையை விரோதித்துக் கொள்ள இஷ்டப்படாமல் அவன் உயிருடன் இருந்தவரையில் சும்மாயிருந்துவிட்டாள். இன்னும் கங்காதரனும் நிரபராதியென்று ரூபிக்கப்பட்டு, அவன் திரும்பி வந்துவிட்டால் உம்முடைய கதி அதோகெதியாய்ப் போய்விடுமென்று உமக்குத் தெரியுமாகையால், நீர் அவன் நிரபராதி அல்லவென்று ரூபிக்க என்னென்ன செய்யவேண்டுமோ அவையெல்லாவற்றையும் செய்துவிடத் தீர்மானித்தீர். ஆனால், நீர் உமக்கு அவ்விஷயத்தைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று கூறியதுமன்றி அவ்விதம் அக்கடிதத்தை கோபாலன் எழுதக் காரணங்களையும் கற்பித்துச் சொல்லவே, மகா புத்திசாலியாகிய அந்த அம்மாளுக்கு உம்மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டது, இன்னும் தன் வீட்டிலிருந்து களவுபோன நகைகளும், பணமும் அவ்விதம் அவ்வீட்டிலிருந்த விஷயம் அந்நியர்களில் உம்மைத்தவிர வேறு எவருக்கும் தெரியக் காரணம் இல்லாததால் அந்த அம்மாளுடைய சந்தேகம் அதிகரித்தது. அவளுடைய சாமர்த்தியத்தைக் கண்டு நான் மெச்சாமலிருக்க முடியவில்லை. தற்சமயம் உம்மை நான் பிடித்ததற்குக் காரணம் அவளேயொழிய நான் அல்ல. அக்கடிதத்தைப் பார்த்ததும் நீர் ஒருக்கால் உம்மிடம் இருந்த (கோபாலன் வீட்டு கொல்லை விற்றுவிட்டு

ராமானுஜய்யங்கார் கொண்டுவந்து தன் வீட்டில் வைத்திருந்த) பணத்தை எடுத்துக்கொண்டு கம்பி நீட்டிவிடுவீரென்று பயந்து அந்த அம்மாள் உம்மை தனபுரிக்கு அனுப்பும்பொழுது, உமக்குத் தெரியாமல் உம்முடன் முத்து என்ற தன் வேலைக்காரன் ஒருவனை அனுப்பினாள். இந்த முத்துவும் லேசான பேர்வழியல்ல.

நிற்க, நேற்று இரவு 8½ மணிக்குள் அவ்வீட்டில் சாயந்தரம் நடந்த எல்லாவற்றையும் அவ்வீட்டின் சமையற்காரன் பரமேசுவரன் வந்து என்னிடம் சொல்லிவிட்டான். எனக்கு ஆதியிலிருந்தே இந்த கங்காதரன் நிரபராதியென்ற எண்ணம் உண்டு. இன்னும் நாங்கள் முதலில் விசாரித்தபொழுது, அவ்வேலைக்காரி நாகு கூறியது முழுமையும் புளுகென்ற சந்தேகமும் எனக்கு உண்டு. ஆனால் மறுநாள் நான் இதோ நிற்கும் தங்கவேலுவைக்கொண்டு, நாகுவை மறுபடியும் விசாரிக்குமுன் அவளை நீர் இவ்வூரைவிட்டே கிளப்பிவிட்டீர். கங்காதரன் குருஸ்வாமியின் சவத்தின் பக்கத்தில் அக்கடிதத்தை வைத்ததிலிருந்தே எனக்கு கோபாலன்மீது சந்தேகமுண்டு. இன்னும் நான் மறுநாள் இரஹஸ்யமாய் விசாரித்ததிலிருந்து, அன்று இரவு 7 மணிவரையில் கோபாலன் தன் வீட்டிற்கு வரவில்லையென்றும், பிறகு அவன் வந்தபொழுது அவன் முகம் வெளுத்து பார்ப்பதற்கே விகாரமாயிருந்ததென்றும் தெரிந்துகொண்டேன். ஆனால் நான் நாகுவை மறுபடியும் விசாரிக்குமுன் எதையும் செய்வது சாத்தியமில்லாமற்போய்விட்டது. அதுவுமன்றி குருஸ்வாமி இறந்த இரண்டாவது நாள் நான் ஒரு மாதலீவில் வெளியூர் போய்விட்டேன். பிறகு நான் திரும்பி வருவதற்குள் கோபாலன் இறந்துவிட்டான்.

நேற்று இரவு, நான் அவ்வீட்டில் நடந்த விஷயத்தை அறிந்ததும், நீர் வாஸ்தவத்தில் இந்த விஷமம் செய்திருந்தால், முதலில் வேலைக்காரி நாகுவைப் பார்த்து, அவளை அப்படியே போலீஸார் கண்டுபிடித்து மறுபடியும் விசாரித்தால், அவள் முதலில் சொன்னதுபோலவே மறுபடியும் சொல்லவேண்டுமென்று அவளை சரிப்படுத்திவிட்டுத்

தான் மறுகார்யம் பார்ப்பீரென்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

ஆகவே, முத்துவென்ற வேலைக்காரன் உம்முடன் சென்றானென்பதை அறிந்ததும் அவன் வாஸ்தவத்தில் புத்திசாலியாயிருந்தால் பொழுதுவிடியுமுன் நாகு இருக்குமிடம் வெளியாய்விடுமென்று எதிர்பார்த்தேன். நான் அப்படி எதிர்பார்த்தது தவறல்லவென்பதை இரவு 3 மணிக்குள் தெரிந்துகொண்டேன். நீர் இங்கிருந்து ஒரு மோட்டாரை வைத்துக்கொண்டு முதலில் கருத்தட்டான்குடிக்கு போனீர். அதே மோட்டாரில் உம்முடன் வந்த முத்துவும் இருந்தான். அவ்விதம் உம்மை கவனித்துக்கொள்ளும்பொருட்டு ஒருவன் உம்முடன் வருவானென்பதை நீர் எதிர்பார்க்கவேயில்லை. பிறகு நீர் நாகுவின் வீட்டிற்குள் நுழைந்ததிலிருந்து, நீர் அதிலிருந்து மறுபடியும் வெளியே வந்தவரையில், உம்மையும் நீர் நாகுவுடன் பேசியதையும் அவ்வீட்டுத் திண்ணையிலிருந்த ஒரு ஜன்னல் வழியாக, முத்து பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் இருந்தான். நீர் அவளுடன் பேசியதிலிருந்து ஓடும் உத்தேசம் உமக்கு இல்லையென்பதை அறிந்துகொண்டதும், முத்து ஒரு மோட்டாரை அமர்த்திக்கொண்டு, திரும்பி வந்து தான் கண்டதையும் கேட்டதையும் அந்த அம்மாளிடம் சொல்லிவிட்டான். ஆதியிலிருந்தே அவ்வீட்டில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்து, பிறகு அதை எனக்கு தெரிவிக்கும்பொருட்டு, நான் அவ்வீட்டின் சமையற்காரனாகிய பரமேசுவரனை ஏற்பாடு செய்திருந்தேனாகையால், நாகு இருக்குமிடம் வெளியானதும், பரமேசுவரன், இவ்விஷயத்தில் நான் எவ்வளவு சிரத்தையுடன் இருக்கிறேன் என்பதை அந்த அம்மாளிடம் சொல்லவே, அவள் உடனே முத்துவையும் பரமேசுவரனையும் என்னிடம் அனுப்பி மேலே செய்யவேண்டியதை தாமதமின்றி செய்யுமாறு வேண்டிக்கொண்டாள். ஆகவே நாங்கள் மூவரும் உடனே மோட்டாரில் சென்று, நாகுவைப் பற்றினோம்; அவள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டாள்.

இப்பொழுது, உம்முடைய ஸம்ஸாரத்தை நான் எப்படிப் பிடித்தேனென்பதை சொல்லுகிறேன் கேளும். நேற்று அவ்வீட்டில் நடந்ததை அறிந்ததும், முதலில் நானும் நீர் ஒருக்கால் உடனே கம்பிநீட்டிவிடுவீரென்று நினைத்தேன். ஆனால் பரமேசுவரன், என் வீட்டிற்கு வரும்பொழுது, மடத்துத்தெருவில் நீர்மட்டும் ஒரு வண்டியில் போனதைக் கண்டதாக என்னிடம் சொல்லவே, எனக்கு மற்றொரு சந்தேகம் தோன்றியது. ஒருக்கால் நீரும் உம்முடைய ஸம்ஸாரமும் சேர்ந்து போனால் சந்தேகத்திற்கிடமென்று, நீர் முதலில் போவதென்றும், பிறகு உம்முடைய ஸம்ஸாரம் வருவதென்றும் ஏற்பாடாயிருக்கலாமென்று நினைத்து, அப்படியே உம்முடைய ஸம்ஸாரமும் புறப்படும்பக்ஷத்தில் அவளைப் பிடித்துக் கொள்ளும்பொருட்டு இதோ நிற்கும் தங்கவேலுவை உம்முடைய வீட்டிற்கு அனுப்பினேன். ஆகவே, நேற்று இரவு உம்முடைய மனைவியும் சீமாச்சுவும் கிளம்பியதும், தங்கவேலு அவர்களை இவ்வூர் ரயில்வேஸ்டேஷனில் மறித்து, என் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்துவிட்டான். நான் அவர்களைக் கண்டதும் முதலில் உம்முடைய ஸம்ஸாரம் நீர் சொல்லித்தான் கிளம்பியிருக்கிறாளென்று நினைத்தேன். அவள் இவ்விதம் உம்மை ஏமாற்றிவிட்டு, உம்மிடமிருந்த நகைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு, இந்தப் பையனுடன் ஓடுகிறாளென்பது பிறகு அவள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். சரி; இப்பொழுது நீர் என்ன சொல்கிறீர்?" என்று வினவ, ராமானுஜய்யங்கார், எழுந்து திடீரென்று தரையில் விழுந்து நடேசய்யருடைய பாதங்களைப் பற்றிக்கொண்டு,

"நீங்கள் சொன்னதெல்லாம் வாஸ்தவம். தெரியாமற் செய்துவிட்டேன். என்னை நீங்கள் எப்படியாவது காப்பாற்றவேண்டும்." என்று கல்லும் கரையத்தக்கவாறு கெஞ்சினார்.

அத்தியாயம் 14.

வெள்ளிக்கிழமை காலை சுமார் 8½ மணி இருக்கும்.

அச்சமயம் திருநாகேசுவரத்தின் சமீபத்திலுள்ள உப்பிலியப்பன் ஸந்நதியில் விவாஹங்கள் நடத்தும் பொருட்டு கட்டப்பட்டிருக்கும் பல வீடுகளில் ஒன்றில் விவாஹ ஏற்பாடுகள் மிகவும் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தன. அதன் மித்தத்தில் பந்தல் ஒன்று போடப்பட்டு அது மிகவும் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு பெரிய கூடத்தில் புருஷர்கள் சிலர் உட்கார்ந்துகொண்டு தாம்பூலம் போட்டுக்கொண்டே சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். புஷ்பம் சந்தனம் இவைகளுடைய வாசனை அவ்வீடு முழுமையும் கம்மென்று வீசிக்கொண்டிருந்தது. விலையுயர்ந்த துணிமணிகளாலும் புஷ்பங்களாலும் சிங்காரித்துக்கொண்டு பல பெண்மணிகள் அங்கும் இங்கும் பரபரப்புடன் போய்க்கொண்டிருந்தனர். நாம் சொன்ன அப் புருஷர்களுடைய கூட்டத்தின் மத்தியில் சுமார் 26வயதுள்ள ஒரு வாலிபன் காணப்பட்டான். பக்கத்திலிருந்த ஒருவர் அவனை நோக்கி,

“ஏண்டா சாம்பூ! உனக்கு இன்னும் எத்தனை நாட்கள் லீவ் இருக்கின்றன?” என்று வினவ, சாம்பூ (சாம்பமூர்த்தி), முதலில் கொஞ்சம் தயங்கிவிட்டு பிறகு,

“இன்னும் ஒரு வாரம் இருக்கிறது.” என்று விடையளித்தான்.

நிற்க, ஒரு அறையில் ஸரஸ்வதியின் சிறு தாயார் அப் பெண்ணை சிங்காரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் ஸரஸ்வதியின் முகம் சந்தோஷம் சிறிதுமின்றி, சகிக்க இயலாத துக்கத்தை எடுத்துக் காட்டியது. நடுவில் தன் புடவையின் ஒரு பாகத்தை எடுத்துத் தன் வாயில் திணித்துக் கொண்டாள். இவ்விதம் அம்மங்கை தன் அழுகையை அடக்கிக்கொண்டபோதிலும் மறுவினாடி அவளுடைய சரீரம் குலுங்கவாரம்பிக்கவே, பக்கத்தில், கண்களில்

நீர் ததும்ப, அவளையே உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்த அவளுடைய தோழி ராஜாம்பாள்,

“ஸரஸ்வதி! வேண்டாம்.” என்று கூறவே, அப் பெண்மணி, மிகவும் பரிதாபகரமான பார்வையுடன் ஒரு தரம் அவளை நோக்கியது, “அடி ராஜம்! நான் என்னடி செய்வேன்? அடியே! நான் எப்படி மனம் சகித்து என் கழுத்தை மற்றொரு புருஷனுக்கு நீட்டமுடியும்?” என்று கதறுவதுபோலிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் தன் சிறு தாயார் வெளியிற் போய்விடவே, தன் துக்கத்தை மேலும் தாங்கமுடியாமல், தன் தோழியை இறுகக் கட்டிக்கொண்டு, “அடி ராஜம்! அடி ராஜம்!” என்று விசித்து விசித்து அழவாரம்பிக்கவே, ராஜம், தன் கரங்களால் அவளுடைய வாயைப் பொத்தி, கெஞ்சிய குரலில்,

“ஸரஸ்வதி! வேண்டாம். நான் சொல்வதைக் கேள். உனக்கு புண்யமுண்டு.” என்று சமாதானப்படுத்திக் கொண்டிருக்கையில், வெளியிலிருந்து,

“[illegible]யாகு தீக்ஷிதரே! நாழியாய் விட்டதே. மாப்பிள்ளையின் கையில் தேங்காயைக் கொடும்.” என்ற சப்தம் வந்தது.

அதே சமயம் அவ்வறைக்குள் நுழைந்த ஸரஸ்வதியின் தாயார் தன் அருமைப் புதல்வியின் நிலைமையைக் கண்டதும் “ஹே தெய்வமே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே. பிள்ளைவீட்டுக்காரர்கள் குசுகுசுவென்று பேசிக்கொள்வதைப் பார்த்தால் எனக்கு பயமாயிருக்கிறதே. ஒருக்கால் என் தங்கை புருஷன் என்னை மோசம் செய்துவிட்டாரோ? ஹே அநாதரக்ஷகா! உம்மைத்தான் நான் நம்பியிருக்கிறேன்.” என்று தன்னுள் கூறியவண்ணம் தன் கரங்களைக் கூப்பி, “என் குழந்தையைக் காப்பாற்றுவது உம்முடைய கடமை.” என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கையில்,

“மேளம்! மே[illegible]பியது.

188780

இவ்விதம் ஸரஸ்வதியின் தாயார் புலம்பிக்கொண்டிருக்கையில் அதே வீட்டின் மற்றொரு அறையில் ஏழெட்டு சிறு பெண்களும் நாலைந்து வயதுமுதிர்ந்த ஸ்திரீகளும் பேசிக்கொண்டிருந்தனர். அதில் சுமார் 40 வயதுள்ள ஒருவள், மிகவும் இறுமாப்புடன்,

“என்ன அநியாயம்? நம்ப சாம்பு எதில் குறைந்தவன்? பார்ப்பதற்கு அழகாயில்லையா? அல்லது உத்தியோகமில்லாமல் திண்டாடுகிறானா? இல்லாவிட்டால் கைத்தொழிற்காரனுக்குப் பிறந்தானா? என்ன வெட்கக் கேடு? எதிர் ஜாமீன் இல்லையாம். சீர் கிடையாதாம். கல்யாணச் செலவும் அவனுடையதாம். என்ன அக்கிரமம்? இதெல்லாம் அந்த சிதம்பரய்யனுடைய வேலைபோலிருக்கிறது. அவன் தன் மச்சினி பெண்ணாயிற்றே என்று குழந்தையை (சாம்பமூர்த்தியை) ஏமாற்றிவிட்டான். அப்படித்தான் பெண் என்ன ரதியா?” என்றாள். தர்மாம்பாள் எனப் பெயர்கொண்ட இம்மாது சாம்பமூர்த்தியின் அத்தையாகையால் அவள் தான் அவ்விதம் பேசுவது மிகவும் நியாயமென்று நினைப்பவள்போல் காணப்பட்டாள். ஆனால் அவள் அவ்விதம் பேசியதும், அதே அறையில் மற்றொரு மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்த சுமார் 25 வயதுள்ள ஒருவள், தன் பக்கத்திலிருந்த மற்றொருவளைத் தொட்டு, தாழ்ந்த குரலில்,

“ஏண்டி தவளம்! இவள் பேசுவதைப் பார்த்தாயோ? அந்தப் பிள்ளை (சாம்பமூர்த்தி) இந்தப்பக்கம் வந்துஇரண்டு மாதமிருக்குமே; இவள் எதிர் ஜாமீனுடனும் சீருடனும் தனக்கு கல்யாணம் செய்துவைப்பதை அவன் வேண்டாமென்று சொன்னானே? அவனைப் பார்த்தால் எனக்கு சந்தேகமாயிருக்கிறது. அடியே! அவன் பம்பாயிலிருந்து வந்ததும் நான் அவனைப் பார்த்தேன். அப்பொழுது அவனைப் பார்த்தவர்களுக்கு இப்பொழுது அவனை அடையாளம் புரியாது. முதலாவது வரும்பொழுது அவனுக்கு மீசையில்லை. [illegible] த்துக்கொண்டிருக்கிறான். இரண் [illegible] அவன் வரும் [illegible] மூக்குக்கண்ணாடி

போட்டுக்கொண்டிருக்கவில்லை. இப்பொழுது அவன் அதில்லாமல் வெளிக்கிளம்புவதில்லை. இன்னும் அவன் போட்டுக்கொள்ளும் மூக்குக்கண்ணாடி மிகவும் விசித்திரமாயிருக்கிறது. எல்லாம்போக அவன் வெளியில் போவதே கிடையாது.” என்று மேலே பேசுமுன், அவள் அவ்விதம் பேசுவதைக் கவனித்துக்கொண்டிருந்த சாம்பமூர்த்தியின் அத்தை, கோபத்துடனும் திமிறுடனும்,

“ஏண்டியம்மா பர்வதம்! குசுகுசுவென்று அவளுடைய காதைக் கடிப்பானேன்? பேசுவதை தைர்யமாய்ப் பேசுகிறதுதானே.” என்றாள். இதைக் கேட்டதும் பர்வதம், உரத்த குரலில்,

“தைர்யமில்லாமல் நான் பயப்படவில்லை. எல்லாம் கிடக்க நீங்கள் எதற்காக சிதம்பரய்யரைப்பற்றி கண்டபடி பேசவேண்டும்? உங்களுடைய சாம்பூ என்ன பச்சைக்குழந்தையா? அவன் 2500ரூ. எதிர்ஜாமீன் வாங்கிக்கொண்டு 3000ரூ. சீருடன் கல்யாணம் செய்துகொள்ளவா சிதம்பரய்யர் வேண்டாமென்று சொன்னார்? இன்னும் பெண் என்ன ரதியா என்று கேட்கிறீர்களே. ரதியை நீங்கள் படத்திலாவது பார்த்திருந்தால் இப்படி பேசமாட்டீர்கள். அம்மாமி! நமக்குத்தான் பேசத்தெரியுமென்று கண்டபடி பேசுவது நியாயமல்ல. நீங்கள் உங்கள் கையைவிட்டு லக்ஷ்ரூபாய் சிலவுசெய்து உலகம் முழுமையும் தேடினாலும் அந்தப் பெண்ணுக்கு காலைப்பிடிக்க யோக்கியதையுள்ள பெண் கிடைக்கமாட்டாள்.” என்று கூறவே, தர்மாம்பாள், ரௌத்திராகாரத்துடன் எழுந்து நின்றுகொண்டு,

“ஏண்டியம்மா! நீ என்ன அவர்களுக்காக வகாலத்து வாங்கிக்கொண்டிருக்கிறாயோ?” என்று கர்ஜித்தாள். ஆனால் பர்வதம், சிறிதும் அஞ்சாமல்,

“உங்களுடைய சாம்பூக்காக நீர் வகாலத்து வாங்கிக்கொண்டு கச்சேரிக்கும் போவதாயிருந்தால் நானும் தயார்.” என்று விடையளிக்கவே, தர்மாம்பாள், கோபாவேசத்துடன்,

"நிறுத்தடி அம்மா! நிறுத்து. கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல் என்னமோ 'நீர் கிர்' என்று பேசுகிறாயே. அந்தப் பெண் அவ்வளவு ஒசத்தியாருந்தால் இதுவரையில் அவளை ஏன் ஒரு டிப்டி கலெக்டர் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?" என்று வினவினாள். பார்வதம், வியக்கத்தக்க அமைதியுடன்,

"ஆமாம். 'நம்ப சாம்பு எதில் குறைந்தவன்?' என்று நீங்கள் கேட்டீர்களே. அவன் ஏன் இதுவரையில் ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜியின் பெண்ணை விவாஹம் செய்துகொள்ளவில்லை? போங்கோ அம்மாமி, போங்கோ. யாருக்காவது தெரியுமோ? உங்களுடைய சாம்பூக்கு இதுவரையில் 108 தரம் கல்யாணம் நிச்சயமானதும், பிறகு ....." என்று மேலே பேசுமுன், அதுவரையில் வெளியில் நின்றுகொண்டு, அவர்களுடைய வாக்குவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த சிதம்பரய்யர், உள்ளே நுழைந்து,

"இதென்ன கூச்சல்? பெண்டுகளா லக்ஷணமா ஒரு இழை கோலம்போட ஒருவளையும் காணோம். சண்டை மண்டை உடைகிறதே. எல்லோரும் வாயை மூடிக்கொண்டு மரியாதையா யிருங்கள். எதிர்ஜாமீனாம் எதிர்ஜாமீன்! வாயைக் கிழித்துக்கொண்டு பேசுகிறவர்களுக்கென்ன? எப்படியாவது தாலி கட்டினால் போதுமென்று நான் தவித்துக்கொண்டிருக்கிறேன்." என்று கோபத்துடன் கூறவே, எல்லோரும் பயந்து வாயை மூடிக்கொண்டனர்.

மேலே நடந்ததை விவரித்து எழுதுவது அனாவசியமாகையால் விட்டுவிடுவோம். கால்மணி நேரத்திற்கெல்லாம் சாம்பமூர்த்தியும் ஸரஸ்வதியும் ஒருவர்முன் மற்றொருவர் நிறுத்தப்பட்டனர். பக்கத்தில் கையில் பல புஷ்ப மாலைகளுடன் நின்றுகொண்டிருந்த ஒருவர் அவர்களிடம் ஒவ்வொரு மாலையைக் கொடுத்தார். அச்சமயம் நம் ஸரஸ்வதியின் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்ததால் அதைக் கண்ட சாம்பமூர்த்தியின் அத்தை,

"ஏன் வலிக்கிறதோ? என்னமோ மூஞ்சியில் அக்காள் கூத்தாடுகிறாளே." என்று கூறவே, சிதம்பரய்யர்,

பிறகு, போலீஸ் இன்ஸ்பெக்டர் பிப்பாய் துரை விடைபெற்றுச் சென்றதும், ஜயஸிங், "ஸ்ரீநிவாஸா! நீ பழைய போலீஸ் ரிகார்டுகளிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் இந்த வைரக்கொள்ளை எவ்விதம் நடைபெறுகிறதென்பதை அறிந்து தெரிவி. அநேகமாய் நாம் இதில் வேலை செய்கிறோம் என்பது ஒருவருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்த வேலை முடிந்ததும் 'இரஜூலா' விலிருந்து நான் எதிர்பார்க்கும் மனிதன் காணப்பட்டால், நீ அவனைப் பின்பற்றிப் போகவேண்டியிருக்கும்." என்றான்.

ஸ்ரீநிவாஸன், "அவ்விதமே செய்கிறேன். நமக்கும் உற்சாகமாய் வேலைசெய்வதற்கு போலீஸாரின் ஸந்தேகத்தைத் தவிர வேறெவ்விதமான உளவுமில்லை. நம்முடைய போலீஸ் சட்டப்படி ஒருவர்மீது போதுமான சந்தேகம் ஏற்பட்டாலொழிய அவரை சோதிப்பதற்கில்லை. நாம் இப்பொழுது சந்தேகிக்கும் இந்த வீரநாதன் நிரபராதியாயிருக்கலாம். அன்றையதினம் அ. ல. பெ. ள. சோமசுந்தரம் செட்டியார் வீட்டில் நடந்த பிரபலமான விருந்தையும் அங்கு நடந்த பாட்டுக்கச்சேரியையும் வேடிக்கை பார்ப்பதற்காக இந்த வீரநாதன் அங்கு சென்றிருக்கலாம். அந்த செட்டியாருடைய இரும்புப்பெட்டிக்கு மற்றொரு சாவி இருக்கும்பக்ஷத்தில் அது அந்த வீட்டுமனிதராலேயே நடந்த திருட்டாயிருக்கும்." என்றான்.

ஜயஸிங் தீவிர யோசனையிலிருந்தான். பிறகு அவன் சிங்கப்பூர் தலைமை போலீஸ் ஆபீஸுக்கு வேறு முக்கிய சமாசாரம் ஏதேனும் உண்டா என தந்தியடித்தான். மறுநாள் கிடைத்த பதில் தந்தியில் முக்கிய விஷயம் ஒன்றும் காணப்படவில்லை. சிங்கப்பூர் போலீஸார், மிக்க கவனத்துடன், வைரக்களவு நடந்த வீட்டிற்கு வந்துபோகிற ஒவ்வொருவரையும் கண்காணித்துவந்தனர். ஆயினும் அதிலும் சிலரையே குறிப்பாகக் கவனித்துவந்தனர். சந்திரா என்னும் தென்னாட்டுப் பெண்ணைப்போல் காணப்பட்ட ஒரு யுவதியும் கவனிக்கப்பட்டுவந்தாள். சந்திரா என்னும் யௌவன நங்கைக்கு சுமார் வயது பத்தொன்பதிருக்க

லாம். அவிழ்ந்த கூந்தல் கருத்தடர்ந்து நீண்டு பரந்து வளர்ந்து சுருண்டு கார்மேகத்தை யொத்திருந்தது. நெற்றி எட்டாம் பிறைச் சந்திரனை யென்னலாம்; ஆயினும் சந்திரனுக்கு இயற்கையாகிய களங்கமுண்டு. அது அம்மாதரசீமணியின் நெற்றியிலில்லை. ஆனால் சிறிய திலகமொன்று முகத்தின் அழகை அதிகப்படுத்திற்று. வில்லினையொத்த புருவமும் வேலன்ன விழிகளும் கண்ட ஆடவரை பெரிதும் வருத்தின; பொருத்தமாயமைக்கப்பெற்ற நாசியும், அன்றலர்ந்த ரோஜா நிறங்கொண்ட கன்னங்களும், அதில் மாசுமறுவற்று நகைக்குந்தோறும் தோன்றும் சிறு மாறுபாடுகளும் காண்போர் மனதைப் பெரிதும் உருக்கின. கொவ்வைக் கனியையொத்த அதரமும், முத்துக்களையொத்த பல் வரிசைகளும் அமைந்திருந்தன. பருத்த மூங்கில்களையொத்திருந்தன தோள்கள். 'மலை நேர் முலைக்கு' என்று ஆன்றோர் கூறியவாறு, பருத்து பெருமிதமடைந்திருந்த தனது இரு ஸ்தனபாரங்களை உயர்ந்த பச்சைப்பட்டு இரவிக்கையினால் இறுக்கி அணிந்திருந்தாள். ஆயினும் ஒவ்வொருமுறை பெருமூச்சுவிடுந்தோறும் அது மேலெழுந்து தணிவதாயிற்று. இவ்வனிதாரெத்தினத்தைக் காணும் காளையர் ஒவ்வொருவரும் மோகலாகிரியிலாழ்வரெனில் சிறிதும் உயர்வு நவிற்சியாகாது. இடை உடுக்கையை யொத்திருந்தது. மற்றும் அவ்வணங்கின் ஒவ்வோர் அங்கமும் தனது பருவகாலத்துக்கேற்ற உருட்சி திரட்சியோடு கூடியிருந்தது. பொதுவாக, மயிலன்ன சாயல், குயிலன்ன குரல், அன்னத்தையொத்த நடை, பத்தரைமாற்றுத் தங்கத்தை உருக்கிவார்த்தாலன்ன சரீரம் எனக் கூறலாம். மேலும், 'வாக்கிற்கருணகிரி' என்னும் பெருமைவாய்ந்த அருணகிரிநாதர்,

'குயில்மொழிக் கயல்விழிக் கிரிதழ்ச் சிலைநுதற்
சசிமுகத் திலகநகைக் கனகுழற் றனகிரிக்
கொடியிடைப் பிடிநடை'

எனக் கூறியதை நிகர்த்திருந்ததெனச் சுருக்கிச் சொல்லலாம். யௌவனத்தினால் தன்னிலை தெரியாது அறிவிழந்து தடுமாறி அலைந்திடும் வாலிபர், சந்திராவைக்காண நேரிடின்,

'வானுலக மங்கையோ! தேவர் மாதோ! இரதியோ!' என அதிசயித்து, இப்பெண்மணியை நாடி, இன்பமனுபவிப்பது,

'' உதிரவகனியை நசும்பாதில்
உடைத்துக் கலந்து தேனைவடித்
தற்றியமுதினுடன் கூட்டி
ஒக்கக் குழைத்த ருசி பிறந்து
மதுரங்கனிந்'' ததை யொக்கும் என்று வர்ணிப்பர் என்பதில் தடையில்லை. தேனைக் குடித்த நரிபோலும், தேனையில் விழுந்த ஈயைப்போலும், அறிவிழந்து தடுமாறும் வாலிபர்களே அவ்வாறு கூறுவர்.

ஆனால் உண்மை நிலைமையோ,

'மூளையழிந்தது; மேட்டி குலைந்தது;
வயது சென்றது; வாய்ப்பல் உதிர்ந்தது;
முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்தது; பிரபையான
முகம் இழிந்தது; நோக்கும் இருண்டது;
இருமல் வந்தது; தூக்கம் ஒழிந்தது;
மொழி தளர்ந்தது; நாக்கும் விழுந்தது; பலநோயும்
நிலுவை கொண்டது; பாய்க்கிடை கண்டது;
ஜல மலங்களின் நாற்றம் எழுந்தது.'

மேலும் நோக்கின்,

'பீளை சாறிடா கனை மேவிடா
வழுவெழுளை உமிழுமுது கொழு கொழு ஒழுகிமிழ'

என்ற நிலைமையை அடையும் ஆயின் இதை யாரே நினைத்துப்பார்க்கின்றார்? இவை பிரபஞ்ச அனுபவ விநோதங்கள்.

சந்திரா இரு பெண் பணிமக்களையும், வயதுசென்ற ஒரு கிழவனையும், தன்னுடன் துணைக்கு வைத்திருந்தாள். ஆனால் சமீபத்தில் ஒருவருடகாலமாக ஒரு வாலிபன் அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருக்கிறான். சிங்கப்பூர் போலீஸார் ஜாக்கிரதையாக வீரநாதனை பின்பற்றி வந்தனராகையால் அது வீரநாதனுக்குத் தெரியாது. அது அவனுக்குத் தெரியும்பக்ஷத்தில், தன்னிடமிருக்கும் வைரத்தை ஒருக்கால் அவன் கடலில் எறிந்துவிடுவான் என போலீஸார் பயந்தனர். சந்திரா நோயுற்று படுத்த படுக்கையாயிருந்தாள்.

ஜயஸிங்கும் ஸ்ரீநிவாஸனும் மறுநாட்காலை புறப்பட்டுச் சென்று துறைமுக அதிகாரியைக் கண்டு தங்கள் காரியத்தைத் தெரிவித்தனர். அவர் தன்னாலான எந்த உதவியையும் தாம் செய்யத் தயாராய் இருப்பதாய்த் தெரிவித்தார். பிறகு அவர் "தாங்கள் அதிகநேரம் காத்திருக்க நேரிடும். ஏனெனில், 'இராஜூலா' கப்பலின் இயந்திரத்தில் ஏதோ பழுது நேரிட்டதாயும், அது சரிப்பட்டு இங்கு குறித்த நேரத்தில் வர இயலாதென்றும், இப்பொழுதே செய்தி கிடைத்திருக்கிறது. இப்பொழுது மணி பத்தாகிறது. பகல் மூன்று மணிக்கு அது இங்கு வந்துசேரலாம். அது வரையில் தாங்கள் இங்கேயே இருக்க நேரிட்டால் என் சொந்த அறையையே தாங்கள் யாதொரு தடையுமின்றி உபயோகித்துக்கொள்ளலாம்." எனத் தெரிவித்தார்.

பல துப்பறிபவர்கள் அங்கு வட்டமிட்டுக்கொண்டிருப்பதை ஜயஸிங் தெரிந்துகொண்டான். ஜயஸிங் அவர்கள் யாவரையும் நன்கு அறிவான். அவர்களில் இருவரை ஜயஸிங் கூப்பிட்டு, வீரநாதன் என்பவரை கவனிக்கும்படி ஏற்பாடுசெய்திருந்தான். இந்த வீரநாதன் பலமுறை சென்ற ஆண்டில் சிங்கப்பூர் சென்று திரும்பியிருப்பதாகவும், ஆனால் அவர் இக்கப்பலில் திரும்பிவருவது இதுவே முதல் தடவையென்றும், அவர்கள் தெரிவித்தனர். சுமார் இரண்டு மணிக்கு 'இராஜூலா' கண்ணுக்குத் தென்பட்டது. துறைமுகத்தில் பலர் வருவதும் போவதுமாயிருந்தனர். தங்கள் பந்துக்களை எதிர்பார்ப்போரும், நண்பர்களைச் சந்திக்க வருவோருமாயிருந்தனர். ஜயஸிங் மாறுவேடத்துடன் முக்கிய முதற்வாயிற்படி அருகில் உட்கார்ந்துகொண்டு ஒரு தினசரிப் பத்திரிகையை பிரித்துப் படித்தபடி இருந்தான். ஸ்ரீநிவாஸன் அவனுக்கு எதிரே சிறிது தூரத்தில் ஒவ்வொருவரையும் உற்றுக் கவனித்தவண்ணமிருந்தான். துறைமுகம் பூராவும் ஜன நடமாட்டம் மிகுந்திருந்தது.

'இராஜூலா' தன் நிலையை அடைந்ததும், கப்பலிலிருந்து பலர் மகிழ்ச்சியோடு இறங்கிச் செல்வாராயினர். ஜய

ஸிங்கும் ஸ்ரீநிவாஸனும் மிக்க ஜாக்கிரதையுடன் கவனித்தனர். அநேகமாய் எல்லோரும் இறங்கிச் சென்றுவிட்டனர். ஆனால் வீரநாதன் என்பவரைப் போல அங்க அடையாளமுள்ள மனிதர் ஒருவரும் காணப்படவில்லை. அநேகமாய் எல்லோரும் பம்பாய், பூனா, கொச்சி, திருவாங்கூர், மலையாளம், இலங்கை முதலிய தேசத்தோராயிருந்தனர். கடைசியாக வயதுசென்ற இருவர், கணவன் மனைவிபோலும் காணப்பட்டவர், வந்தனர். ஆனால் அவர்களது பெயர் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் ஜாப்தாவில், திருச்சி கோபாலகிருஷ்ணன், சௌந்தரவல்லி என்று காணப்பட்டது.

கோபாலகிருஷ்ணன் நடுத்தர உயரமும், அவரது மீசை, தலைமயிர் முதலியன நரைத்தும் காணப்பட்டார். அவரது முகம் வெளுத்திருந்தது. கண்களுக்கு பச்சை நிறமான குளிர்ச்சி மூக்குக் கண்ணாடியை அணிந்திருந்தார். இதனால் அவரது முகத்தோற்றம் தெளிவாகப் புலப்படவில்லை. சௌந்தரவல்லி பிணியால் வருந்தும் நோயாளியைப்போல், உடம்பு முழுவதும் கம்பளியால் மறைக்கப்பட்டிருந்தாள். முகத்தில் கவலைக்குறியும், நோய் உபாதையும் புலப்பட்டன. அநேகமாய் அவர்களிருவரும் யாவரையும் கடந்து ஜயஸிங் இருந்த இடத்தையும் தாண்டிச் சென்றனர். ஜயஸிங்கின் கூறிய கண்பார்வையிலிருந்து அவர்கள் மறையவில்லை. அவனது கண்கள் வெகு சீக்கிரத்தில் அவர்களை ஆராய்ந்து திரும்பியதும், ஒரு விஷயம் அவனுக்கு ஸந்தேகத்தையுண்டாக்கியது. கோபாலகிருஷ்ணன், சட்டைப் பையிலேயே மறைக்கப்பட்டிருந்த தன் கையைச் சற்று வெளியிலெடுத்ததும், அது வயது சென்ற மனிதனுடைய கையைப்போல் காணப்படவில்லை என்பதை ஜயஸிங் அறிந்துகொண்டான்.

உடனே ஜயஸிங் ஸ்ரீநிவாஸனுக்கு ஒரு சைகை செய்தான். அதை ஸ்ரீநிவாஸன் உடனே அறிந்துகொண்டதற்கடையாளமாக சிறிது கனைத்தான். பிறகு ஜயஸிங் துறைமுக அதிகாரியிடம் சென்று அவ்விருவருடைய சாமான்

களைப்பற்றி விசாரித்தான். அதற்கு அவர் 'சாமான்கள் ஒன்றும் அதிகமில்லை. இரண்டு பெட்டிகளும் ஒரு சிறு மூட்டையுமே. அதில் அவர்களுடைய உடுப்புக்களும் மற்றும் சில சாமான்களுமே இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் திருச்சிராப்பள்ளிக்கு மறு வண்டியில் செல்லவேண்டியிருப்பதாயும், சீக்கிரம் தாமதியாது சாமான்களை சோதித்ததும் அனுப்புமாறும் தெரிவித்துவிட்டுச் சென்றனர். அவ்வளவுதான் விஷயம்.' என்றார்.

ஜயஸிங், ஸ்ரீநிவாஸன் இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தான். ஆனால் அங்கு ஸ்ரீநிவாஸன் காணப்படவில்லை. ஜயஸிங் முதலில் சந்தித்த இருதுப்பறிபவரையும் கண்டு 'இங்கிருந்து சிறிதும் நகரவேண்டாம். நான் கப்பலுக்குட் சென்று எங்கேயாவது அந்த வீரநாதன் என்பவர் ஒளிந்துகொண்டிருக்கிறாரா என்று பார்த்துவிட்டு வருகிறேன். ஏனெனில், அவனுடைய அங்க அடையாளமுள்ள எந்த மனிதனும் நம்மைக் கடந்து செல்லவில்லை. இது மிக்க ஆச்சரியமாயிருக்கிறது.' என்று கூறிவிட்டு, அங்கிருந்த படிகளின் மூலம் ஏறி கப்பலுக்குட் சென்றான். கப்பல் உத்யோகஸ்தர்கள் யாவரும், தங்கள் வேலை முடிந்தபடியால், பல இடங்களில் உட்கார்ந்துகொண்டு பற்பலவாறு சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ஜயஸிங் கப்பல் தலைவரைக் கண்டு தான் இன்னாரெனத் தெரிவித்து வீரநாதன் என்பவர் ஜாப்தாவிலிருந்தும், அவர் காணப்படாத காரணத்தைக் கேட்டான். அதற்குத் தலைவர், 'ஆம். தாங்கள் கூறும் வீரநாதன் என்பவருக்காக முன்னரே அறிவிக்கப்பட்டபடி, முதல் வகுப்பில் இரண்டிடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் அவருக்கு நீராவிப் படகு தவறிவிட்டதினால், கப்பல் புறப்பட்ட நேரத்திற்கு அவர் வரமுடியவில்லை.' என்றார்.

ஜயஸிங் அவருக்கு வந்தனம் செலுத்தி விடை பெற்றுக்கொண்டான். கப்பலை விட்டிறங்கி ஓரிடத்தில் அமர்ந்து யோசித்தான். அவன் மூளை குழம்பியது. ஏன் வீரநாதன் கப்பலில் வரவில்லை. உண்மையாக படகு தவறிவிட்டதா?

அன்றி தன்னுடைய முறையை மாற்றிக்கொண்டு வேறு வழியாக வர உத்தேசித்துள்ளானா? அல்லது இன்னும் சிங்கப்பூரிலேயே தங்கியிருக்கின்றானா? எனப் பலவாறு எண்ணினான். சிறிது அவன் மூளை தெளிவடைந்தது. 'வீரநாதன் பெரும் தந்திரசாலியாயிருக்கலாம். ஒருக்கால் கோபாலகிருஷ்ணன்தானா வீரநாதன். அப்படியானால் அந்த நோயுண்டிருக்கும் பெண் யார்?' எனப் பல கேள்விகளைத் தனக்குள் கேட்டுக்கொண்டான். உடனே அவன் திரும்பிச் சென்று, துறைமுக ஆபீஸிலிருந்த கம்பியில்லாத் தந்தி ஆபீசுக்குச் சென்று, 'சந்திரா என்னும் பெண்ணைப்பற்றிய பூராவிவரங்களும், அம்மாதின் வீட்டை சோதித்து, உடனே தெரிவிக்கும்படி சிங்கப்பூர் தலைமை போலீஸ் ஆபீசுக்கு ஒரு தந்தி கொடுத்தான். இவ்வுலகில் நடக்கும் அக்கிரமங்களைக் காணப் பொறாதவன் போல், ஆதித்தன் மேற்குக் கடலுள் ஆழ்ந்தான். சிறிது சிறிதாக வெளிச்சமும் குறைய ஆரம்பித்து எங்கும் அந்தகாரம் சூழ்ந்தது. ஜனங்கள் நடமாட்டம் மிகுந்திருந்த துறைமுகத்தில் ஒருவரும் காணப்படவில்லை. எங்கும் நிசப்தமாயிருந்ததாயினும், கடலினது பேரொலிமட்டும் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. இரு காவலாளிகள்மட்டும் துறைமுகத்தில் அங்குமிங்கும் உலவியவாறிருந்தனர். ஸ்ரீநிவாஸன் எப்பொழுது வந்தாலும் உள்ளே விடும்படி காவலாளிகள் உத்திரவு பெற்றிருந்தனர். இரவு ஒன்பது மணிக்குமேல் ஸ்ரீநிவாஸன் ஜயஸிங் இருந்த அறைக்கு வந்து சேர்ந்தான்.

பெரும் ஆலோசனையிலமிழ்ந்திருந்த ஜயஸிங், ஸ்ரீநிவாஸன் வந்ததையறிந்ததும், 'என்ன விசேஷம்?' என்றான். ஸ்ரீநிவாஸன்,

“நான் அவர்களிருவரையும் அதிக தூரம் பின்பற்றிச்சென்றேன். அவர்கள் மூன்றிடங்களில் தங்கள் மோட்டாரை மாற்றிக்கொண்டனராயினும், நான் பின்பற்றிச் செல்வது அவர்களுக்குத் தெரியாது. கடைசியாக அவர்கள் நகரின் ஒரு கோடியை அடைந்து, பல சிறு சந்துக

188789

[illegible] 600 008

வின் வழியாக திரும்[illegible]டைசியில், உயர்ந்த ஒரு பழய வீட்டிற்குள் புகுந்தனர். நெடுநேரம் காத்திருந்தேன். ஒருவரும் அவ்வீட்டினின்றும் வெளிவரவில்லை. ஆயினும் அவ்வீட்டில் மற்றும் இருவர் இருக்கின்றனர் என்பது நிச்சயமானவுடன், நான் அவ்வீட்டைக் குறித்துக்கொண்டு திரும்பினேன்." என்றான்.

இவ்விஷயங்களை அறிந்ததும் ஜயஸிங், சிறிது திருப்தியடைந்து, "ஸ்ரீநிவாஸா! உன்னுடைய சாமர்த்தியம் எனக்குத் தெரியும். நீ இல்லாவிடில் நான் இதொழிலையே விட்டுவிடவேண்டியதுதான். இந்த கோபாலகிருஷ்ணன் ஒருக்கால் வீரநாதனாய் இருக்கலாம். அப்படியாயின் அந்த வயது சென்ற சௌந்தரவல்லி என்ற பெண் யாரெனத் தெரியவில்லை. எப்படியாயினும், இவர்களை நான் சந்தேகிப்பதால், துணிந்து வளைத்துக்கொண்டு, திடீரென உட்புகுவதே சரி." என்று கூறி ஸ்ரீநிவாஸனையும் அழைத்துக்கொண்டு, ஒரு கடிதத்தை எழுதி மேஜைமீது வைத்துவிட்டு, தன் மோட்டாரிலேறி வேகமாய்ச் சென்றான்.

இருவரும் சீக்கிரத்தில் ஸ்ரீநிவாஸன் குறிப்பிட்ட தெருவை யடைந்தனர். ஜயஸிங் அங்கேயே மோட்டாரை நிறுத்தும்படி கூறி, மோட்டார் ஓட்டியை ஜாக்கிரதையாயிருக்கும்படியும், இன்னும் பத்து நிமிஷம் அதிகப்பட்டால் ஒருமணி நேரத்திற்குள் திரும்பிவருவதாயும் கூறிவிட்டு, இருவரும் அத்தெருவினுள் நுழைந்தனர். அப்பொழுது மணி சுமார் பதினொன்றிருக்கலாம். அச்சிறிய தெருவில் ஒருவரும் காணப்படவில்லை. ஸ்ரீநிவாஸன் கூறிய வீட்டை அடைந்தனர். அந்த வீட்டின் முன்புற அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஜயஸிங் 'நான் துணிந்து உள்ளே செல்கிறேன். நீ வெளியே இருந்து கவனித்தபடியிருந்து, எனக்கு ஏதாவது ஆபத்தேற்படுமென்று தோன்றினால், நம்முடைய ஆட்களுடன் உதவிக்குத் தயாராய் இரு.' எனக் கூறிவிட்டு, அவ்வீட்டு வாசற்படியை அடைந்து, வெளிச்சம் வந்துகொண்டிருந்த அறையின் சமீபம் சென்று உற்றுக் கேட்டான்.